CHARTERED ACCOUNTANCY
CAB II
ENGLISH MEDIUM
STARTED ON
09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

சித்திரை மாதம் 07ம் திகதி

April 20, 2013

மலைமுரசு®

அறைவு 01 இயம் 39

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# குற்றச்சாட்டு – கிழக்கின் மாகாண சபை தவிசாளர் மீதா?

## சட்டவிரோத கல்லுடைக்கும் ஆலை அனுமதிக்காக அரச அலுவலரை மிரட்டினாரா?.. மறுத்தார் தவிசாளர்

கந்தளாயின் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசத்தினுள் சட்டவிரோத கல்லுடைக்கும் ஆலையொன்றை உருவாக்குவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சிரேஷ்ட சுற்றுச்சூழல் அலுவலர் ஒருவரை கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் வெருட்டியதாக..

7

# இயல்பில்லா வாழ்வில் ஈழத்தமிழர்கள்!!

## – இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் –

**"இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வருகையில் சந்தேகம் – அறிக்கையிடுமாறு சனாதிபதி உத்தரவு"**

தமிழர்களுக்கு, இலங்கை அரசாங்கம் அரசியல் அதிகாரங்களை வழங்குவது சந்தேகமே. அங்குள்ள தமிழர்கள் எல்லாம் அச்ச உணர்வுடனே உள்ளனர். இந்த விடயத்தில், இந்தியா தலையிட்டு, ஏதாவது செய்யாதா என எதிர்பார்க்கின்றனர் என்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய பாராளுமன்ற குழுவில் அங்கம் வகித்த திரிணமுல் காங்கிரஸ் எம்.பி., சவுகதா ராய் தெரிவித்துள்ளார்.

இந்திய எம்.பிக்கள் குழு, அண்மையில் இலங்கைக்கு வந்து இந்தியா சென்றிருந்தது. இந்தக் குழுவில், சந்தீப் தீட்சித் (காங்.,), பிரகர் ஜாவடேகர், அனுராக் சிங் தாக்கூர் (பா.ஜ.,), தனஞ்ஜெய் சிங் (பகுஜன் சமாஜ்) மற்றும் மம்தா பானர்ஜியின் திரிணமுல் காங்.. எம்.பி., சவுகதா ராய் ஆகிய ஐந்து பேர் இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், இலங்கை பயணம் முடித்து, இந்தியா திரும்பியுள்ள இவர்களில், திரிணமுல் காங்கிரஸ் எம்.பி., சவுகதா ராய் அவர்களது விஜயம் குறித்து..

7

# நாளை மாலை இந்துக் கல்லூரியில் "அரங்காடல்"

திருகோணமலை மாவட்ட கலை கலாசார அபிவிருத்தி அமையத்தினால் இரு மாதங்களுக்கொருமுறை நடாத்தப்படும் கலாசார நிகழ்ச்சியான "அரங்காடல்" - ஞாயிறு (21.04.2013) மாலை 4.00 மணிக்கு ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. விருப்பமுடையோர் அனைவரும் வருக என்ற திறந்த அழைப்புடன் நிகழும் ஒன்பதாவது "அரங்காடல்" இதுவாகும்.

செல்வி. நவசஞ்சிதாவின் தமிழ்மொழி வாழ்த்துடன் ஆரம்பமாகும் அரங்காடலின் நிகழ்வுரையை கலை கலாசார அபிவிருத்தி அமையத்தின் தலைவர் இ. ஸ்ரீஞானேஸ்வரன் நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து கவிதையொன்றை செல்வி. எஸ்த்தர் பொழிய, வேல் முன்பள்ளிச் சிறார்களின் "சின்னச் சின்னச் சிட்டுகளாம்" நாடகம் நடைபெறும்.

7

**ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் வெற்றியாளர்கள்**

**பரிசில்களை வழங்குகிறார்கள்**

**ரிங்கோ ஸ்டேஷனரீஸ்**

**"வெற்றியாளர்களின் விபரங்கள் 5ம் பக்கத்தில்"**

# எலிக் காய்ச்சல்

## விவசாயிகள் எச்சரிக்கப்படுகிறார்கள்!!

வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் டொக்ஸிசைக்கிளின் Doxycycillin மாத்திரையைப் பாவித்துக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேநேரம், கடும் காய்ச்சல், கண்கள் சிவப்பாதல், உடல் வலி போன்ற அறிகுறிகள் காணப்படுபவர்கள் தாமதியாது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும்



சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இற்றை வரையும் எலிக்காய்ச்சலுக்கு 1281 பேர் உள்ளாகியுள்ளனர். இவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

7

# ரிஸானா நபீக்கின் குடும்பத்திற்கு நிதியுதவி



7

## கணவன் மது அருந்தியதால் மனைவி விசம் அருந்தினார்

## கிளிவெட்டியில் இளம் குடும்பப்பெண் தற்கொலை!

திருகோணமலை சேருநுவர காவல்துறை பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி தங்கநகர் பிரதேசத்தில் 22 வயதான பெண்ணொருவர் தமது கணவர் மது அருந்திய காரணத்தினால் விஸமருந்தி உயிரிந்தார்.

நேற்று மாலை இவர் விசமருந்திய நிலையில், திருகோணமலை ஆதார...

7

# கிண்ணியா மத்திய கல்லூரிக்கு 14 மில்லியன் ரூபா நிதி

## – நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் –

கிண்ணியா மத்திய கல்லூரிக்கு சுமார் 14 மில்லியன் ரூபா நிதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்

நிர்வாக கட்டடமொன்றை நிர்மாணிக்கப்படுவதற்காகவே கிண்ணியா மத்திய கல்லூரிக்கு இந்த நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிதி எனது வேண்டுகோளிற்கிணங்க கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். கட்டிட நிர்மாணத்திற்கு முதற் கட்டமாகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்த கட்டிடம் அமையப் பெறுவதன் மூலம் கல்லூரியின் நீண்ட கால தேவையொன்று நிவர்த்தி செய்யப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தௌபீக் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

காதலின் பெயரால் கொலைகளும் தற்கொலைகளும்

கடந்த வாரம் மட்டக்களப்பில் நிகழ்ந்த கொலைச் சம்பவமொன்றின் சூத்திரதாரிகள் வெளிச்சங்காட்டப்பட்ட போது மனசு அதிர்ந்து போனது....

தனது பதின்மவயதுக் காதலனுடன் சேர்ந்து தனது தாயையும் தந்தையையும் வெட்டிக் கொலை செய்த அச் செய்தியின் பின் காதல் தொடர்பான புரிதலின் புதியள பரிமானம் கொலையா என்ற கேல்வியே எஞ்சி நிற்கின்றது!!! இதே போலவே திருமலையின் ஐயனார்கேணிப்பகுதியில் ஏதுமறியா தனது அப்பாவிக் கணவனை, இருபதுகளின் வயதிலிருந்தவனை, தனது கள்ளக் காதலனை ஏவி வெட்டிக்கொலை செய்யப் பணித்த பெண்ணின் நினைவும் மேலெழுகின்றது

காதல் பற்றிய வரைவிலக்கணங்கள் எதுவுமே காதலுக்குப் பொருத்த மானதல்ல. ஏனெனில் ஒவ்வொருவரது காதலும் உன்னதமானதும் அவரவரின் வரையறைக்குள் அடங்குவதும் ஆகும். ஆனால் அவ்வெந்த வரையறைக்குள்ளும் காதலுக்காக கொலைகள் என்பதும் தற்கொலைகள் என்பதும் உள்ளடக்கப்படவில்லை என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

காதல் என்பது அன்பின் மிக உயர்ந்த நிலை என்பதே பொதுவான எண்ணம். அன்பு மிக உயர்ந்த நிலையிலிருக்கும் போது அங்கு கொலைசெய்யும் வஞ்சம் எவ்வாறு ஊற்றெடுக்கும்? அன்புப் பெருக்கத்தினால் அமைதியும், ஆழ்ந்த சிந்தனையும் வாழ்வின் மீதான பற்றுதலும், இவையெல்லாவற்றிற்கும் மேலாக அனைவரின் மீதும் பிரவாகிக்கும் அவ்வன்பும் தானே காதலின் பரிமாணங்களாய் பரிமளிக்கின்றன. அவ்வாறாயின் காதல் கொலைவெறியாய் ஏன் மாறுகின்றது...? அல்லது மாற்றப்படுகின்றது என்பதை கூர்ந்து அவதானித்தால் அது தமிழ் சினிமாவின் தாக்கம் என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

ஆரம்பகாலத்தில் காதலில் தோற்றவர்கள் தாடி வளர்க்கவும், மதுவினால் தம்மைத் தாமே அழித்துக்கொள்ளவும், எல்லாவற்றுக்கும் மேலாக நஞ்சைக் குடித்துத் தற்கொலை செய்து கொள்ளவும் சொல்லித் தந்த அதே சினிமா தற்போது ''வாழ்வைக் கொலைவெறியாக'' கற்றுத் தருகின்றது.

கதானாயகத்துவத்தின் உச்சக் கட்டம் பெண்ணைச் சிறை மீட்பது எனக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கும் சினிமா ஆணினால் மட்டுமே பெண்ணைச் சிறைமீட்க முடியும் என்ற ஆணாதிக்கக் கருத்தை கொலைவெறியோடு சொல்லித் தருகின்றது. கற்றுக்கொள்கின்றார்கள் இளையவர்கள். நாம் அவர்களைப் கல்விப் புத்தகங்களில் மட்டும் கவனம் செலுத்தச் செய்கின்றோம். கலை நிகழ்ச்சிகளில் அரங்கங்கள் வெறிச்சோடிக்கிடக்கின்றன....

கொலைவெறியின் முடிவில் செத்துக்கிடப்போம் நாம்... காதலின் பெயரால்......

# கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகளில் முன்னறிவித்தலின்றி மின் தடை

கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னறிவித்தலின்றி மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதால் தாம் கடும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பிரதேச மின்பொறியியலாளர் அனிதா பரமாணந்தராஜாவிடம் நாம் வினவியபோது, மின்விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக இந்த மின்தடை ஏற்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் பல பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டுள்ளதாக அவர் கூறினார். கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு கண்டறிந்து சீர் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். எனினும் மின்விநியோகத்தை வழமைக்கு கொண்டுவரும் நேரம் குறித்து உறுதியாக கூற முடியாதுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச மின்பொறியிலாளர் மேலும் தெரிவித்தார்.

# விமானத் தொழில் நுட்பவியலாளர்களின் பயிற்சி நிறைவு


சீனன் குடா விமானப் படைத்தளத்தில் தமது தொழில்நுட்பப் பயிற்சிகளை நிறைவு செய்த 220 விமானத் தொழில்நுட்பவியலாளரின் பயிற்சி நிறைவு நாள் கடந்த 08.04.2013ல் நடந்தேறியது. இத் தொழில்நுட்பப் பயிற்சியானது இராணுவத் தந்திரோபாயப் பயிற்சி, ஆயுதப்பயிற்சி, வரைபட வாசிப்பு, வான்படை ஒழுங்கமைப்பு, தீயணைப்பு, வெடிகுண்டுப் பயிற்சி, மனிதாபிமானச் சட்டங்கள், காட்டுத் தாக்குதல் பயிற்சி போன்ற இன்னோரன்ன பயிற்சிகளின் தொகுப்பாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வான்படையின் சரக்குக் கையாள்கைப் பணிப்பாளர் ஏர் வைஸ் மார்சல் ஜெயம்பதி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு இப் பயிற்சி நிறைவினைச் சிறப்பித்திருந்தார். வான்படைப் பயிற்சிப் பணிப்பாளர் ஏர் வைஸ் மார்சல் யஹம்பத் சிறப்பு விருந்தினராகக் கலந்திருந்தார். அணிவகுப்பு மரியாதையின் போது சீனக்குடா வான்படைத் தளப் பயிற்சிப் பொறுப்பாளர் கமாண்டன்ட் பத்திரண இவ்விருவருடன் சேர்ந்து அம் மரியாதையை ஏற்றுக்கொண்டிருந்தனர்.

மாதிரிப் பயிற்சிகள் பலவற்றை பயிற்சி பெற்றவர்கள் நிகழ்த்திக் காட்டியிருந்தனர். இந் நிகழ்வில் வான்படைத் தள அதிகாரிகள் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்திருந்தனர்.

## ஆசியமுரசு

# உளவுச் சலனப்படக் கருவியுடன் இந்திய எல்லையில் மர்மப் பறவை



உடலில் சலனப்பட மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் இந்திய எல்லைப் பகுதியில் பறவையொன்று இறந்து கிடந்தமை குறித்து இராணுவ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பாலைவன எல்லைப் பகுதி ஜெய்பூர் அருகே உள்ள ஜெய்சால்மர் என்ற இடத்தில் வல்லூறு (கழுகைப் போன்ற பெரிய அளவிலான) பறவை ஒன்று இறந்துக் கிடந்தது.

அந்த பறவையின் உடலில் கசெலனப்பட மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன், இறந்து கிடந்த வல்லூறின் உடலில் பாகிஸ்தானில் உள்ள ஒரு விலாசமும், போன் நம்பரும் சிகப்பு மையில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்திய பகுதிகளை உளவு பார்ப்பதற்காக இந்த பறவையை பாகிஸ்தான் அனுப்பி இருக்குமா? என்ற கோணத்தில் இராணுவ அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

கடந்த 2010ம் ஆண்டில் புறாவின் காலின் கேமராவை பொருத்தி இந்தியாவிற்குள் அனுப்பி பாகிஸ்தான் உளவு சேகரித்தமை குறிப்பிடத்தக்கது

# 5 வருடங்களுக்கு ஒரு முறையே ஹஜ் யாத்திரை

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மாத்திரமே ஹஜ் யாத்திரையினை ஒருவர் மேற்கொள்ள முடியும் என்ற நிபந்தனையை சவூதி அரேபிய அரசாங்கம் விதித்துள்ளது. இதற்கமைய ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையே ஹஜ் யாத்திரையினை ஒருவர் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றுநிரூபம் சவூதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சினால் முஸ்லிம் சமய கலாசார விவகார திணைக்களத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ''எனினும் இந்த நிபந்தனை இலங்கைக்கு மாத்திரமல்ல. சகல நாடுகளும் உள்ளடங்கும்'' என முஸ்லிம் சமய கலாசார விவகார திணைக்கள பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.சாமில் தெரிவித்தார்.

நிபந்தனைக்கு அமைய ஹஜ் யாத்திரை மேற்கொண்ட ஒருவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஹஜ்ஜுக்கான விசா வழங்கப்படமாட்டது என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 2013ஆம் ஆண்டு ஹஜ் கடமையினை நிறைவேற்ற சுமார் 6,000 பேர் இதுவரை விண்ணப்பித்துள்ளனர். எனினும் 2,800 [illegible] மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரகத் நகர் முஸ்லிம் வித்தியாலயம்

# அபிவிருத்திக்கு தெரிவு



ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்.. அபிவிருத்தி செய்யவென குரங்கு பாஞ்சான் - பரகத் நகர் முஸ்லிம் வித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வாக மதில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா பாடசாலை அதிபர் எம்.வை. ஹதியுள்ளா தலைமையில் நடைபெற்றது.

# புலமைப் பரிசில் பாராட்டு விழா


வடக்கு கிழக்கு மாகாண கல்வி ஊழியர் கூட்டுறவுச் சங்கம் 2012ம் வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பாராட்டு விழா ஒன்றினை நடாத்த உள்ளது. வருடாந்தம் நடைபெறும் இவ் விழாவின் அக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் பிள்ளைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைப் பாராட்டும் விழாவாக இவ்விழா நடைபெறுகின்றது. 28.04.2013 அன்று இவ்வாண்டுக்கான விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் தெரிவித்தார்.

# இந்திய வான்படையின் திறன் பயிற்சிகள்

முதல் முறையாக இந்திய வான்படை தனது இருமுனைத் தாக்குதல் திறனை மதிப்பிடும் பியற்சிகளை மேற்கொண்டுள்ளது. சீனா மற்றும் பாகிஸ்தானிலிருந்து ஒரே நேரத்தில் தாக்குதல் வான் வழியாக நிகழ்த்தப்படுமாயின் அத்தாக்குதலை தடுத்தலையும் பின்னர் எதிர்தாக்குதலை மேற்கொள்வதையும் எவ்வாறு செய்வது என்பதையே மேற்போந்த பயிற்சிகள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விருமுனைத் தாக்கு, தற்காப்புப் பயிற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதாக இந்திய வான்படைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ் வெற்றியின் ஊடாக இந்திய வான்படையானது ஒரே நேரத்தில் இருநாடுகளின் வான் தாக்குதல்களையும் எதிர்கொண்டு அவற்றை இல்லாதொழிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது.

நானூறுக்கும் மேற்பட்ட இந்திய வான்படை விமானங்கள் கலந்துகொண்ட இப்பயிற்சிக்கு "வாழ்வாதாரம்" (Livewire) எனச் சங்கேதப் பெயரிடப்பட்டிருந்தது. மார்ச் மாதம் 18ம் திகதி தொடங்கிய இப் பயிற்சியானது மூன்று வாரங்கள் தொடர்ந்து நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சிகளில் ஜகுவார், மிராஜ், மிக் ரக அதிவேகத் தாக்குதல் விமானங்களும் கலந்துகொண்டிருந்தன.



## விமான நிலையத்தில் வகையாக மாட்டினார்

### – நிதி அலுவலர் –

சுமார் பதின் மூன்று லட்சம் ரூபா பணத்தைச் சுருட்டிக் கொண்டு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற நிதி அலுவலரை அங்கு நிலைகொண்டிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். நிறுவனமொன்றின் செலவுப் பற்றுச்சீட்டுக்களை அனுமதிக்கும் அங்கீகாரம் பெற்றிருந்த இந்நிதி அலுவலர் 2009ம் ஆண்டிலிருந்து தற்போது வரை சிறுகச் சிறுக சுமார் பதின் மூன்று லட்சம் ரூபாவை மோசடி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

## மது அருந்துவோர் பட்டியலில்

### இலங்கை நான்காம் இடத்தில்!

உலகிலேயே மது அருந்துவோர் அதிகமாகவுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை நான்காம் இடத்தில் உள்ளது.

எனவே நாட்டில் மதுவுக்கு "முற்றுப்புள்ளி" என எப்படிக்கூறமுடியும் என தேசிய சங்க சமேளனத்தின் தலைவர் ரஜவத்தே வப்ப தேரர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பண்டிகை அன்று ஊருக்கு செல்லும்போது "ஒரு கை வெற்றிலையுடனேயே செல்வார்கள். இன்று இரண்டு போத்தல் சாராயத்துடன் செல்லும் கலாசார சீரழிவு உருவாகியுள்ளதாகவும் தேரர் தெரிவித்துள்ளார்."

இது மதுவுக்கு "முற்றுப்புள்ளி" என்பது இல்லை, இது மதுவுக்கு (கமா) என்றே கூறவேண்டும். அதாவது, தொடர்கதையாகிவிட்டது என்று ரஜவத்தே வப்ப தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# தேசமுரசு

## மனிதவுரிமைகள் விடயத்தில் எதிர்மறைப் போக்கில் இலங்கை

மனித உரிமை மேம்பாடு, ஜனநயாகம் மற்றும் சட்ட ஆட்சி போன்றவற்றில் பொதுநலவாய அமைப்புக்களின் கொள்கைகள் கோட்பாடுகளை பின்பற்றுமாறு இலங்கையை பிரித்தானியா வலியுறுத்தியுள்ளதுடன் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதில் இலங்கை எதிர்மறையான வளர்ச்சிப் போக்கினை அடைந்துள்ளதாக பிரித்தானியா கவலை தெரிவித்துள்ளது.

2012ஆம் ஆண்டில் இலங்கை மனித உரிமை நிலைமைகள் திருப்தி அடையும் வகையில் அமையவில்லை என சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை, கடந்த ஆண்டில் பல பாதகமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் குறிப்பாக கருத்துச் சுதந்திர முடக்கம், நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு எதிராக செயற்படல், ஊடக சுதந்திர முடக்கம் போன்றவை தொடர்பில் திருப்தி அடைய முடியாது என தெரிவித்துள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான ஒடுக்கு முறைகள் உள்ளிட்ட பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் 2012ஆம் ஆண்டிலும் நீடித்ததாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, 2011ஆம் ஆண்டில் காணாமல் போன லலித் குமார் மற்றும் குகன் ஆகியோர் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் நடத்தப்படவில்லை. மனித உரிமை மேம்பாடு, ஜனநயாகம் போன்றவற்றில் பொதுநலவாய அமைப்புக்களின் கொள்கைகள் கோட்பாடுகளை பின்பற்றுமாறு இலங்கையை வலியுறுத்துவதாக பிரித்தானியா கோரியுள்ளது

## சுற்றுளா பயணிகளுக்கு விசேட பாதுகாப்பு

### பொலிஸ் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி விசேட திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் அனைவரும் கண்காணிக்கப்படவுள்ளனர். இப் புதிய பாதுகாப்பு திட்டத்தின் ஓர் அங்கமாக ஹோட்டல் மற்றும் விருந்தினர் விடுதி நிர்வாகத்தினரிடம் அங்கே தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகள் தொடர்பில் தமக்கு வாராந்தம் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும் படி பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதியே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்மூலம் ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள சுற்றுலாப்-பயணிகள் தொடர்பில் அதிகாரிகள் தகவல்களை வைத்திருப்பதன் மூலம் அவர்களை பாதுகாக்க முடியுமென பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்-காட்டியுள்ளார்.

## நில நடுக்கத்தால் இலங்கைக்கும் பாதிப்பு

ஈரான் - பாகிஸ்தான் எல்லையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் இலங்கைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நிலநடுக்கத்-தினால் இலங்கையைச் சூழவுள்ள கடல்பகுதிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சி.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஒரு இடத்தில் நில அதிர்வு ஏற்படும் பட்சத்தில் அதனை அண்டிய நில மற்றும் கடற்பகுதிகளும் பாதிக்கப்படுவதாக அவர் சுட்டிகாட்டியுள்ளார்.இதன் தாக்கம் பின் நாளில் தெரியவரும் என அவர் தெரிவித்துள்ளார்.ஈரான் - பாகிஸ்தான் எல்லையில் நேற்று முன் தினம் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.8 ஆக பதிவாகியது.மேலும் சவுதி, கட்டார், பஹரெய்ன், டுபாய் உட்பட மத்திய கிழக்கின் பல பகுதிகளிலும் இந்தியாவின் புதுடெல்லி, ஆப்கானிஸ்தானிலும் இதன் தாக்கம் உணரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## கலாவிநோதன் கலாபூசணம் அமரர் சித்தி அமரசிங்கம்

ஜீவராஜ்

கலாவிநோதன் கலாபூசணம் சித்தி அமரசிங்கம் அவர்கள் திருகோணமலையில் ஒரு சாதாரண குடும்பத்தில் கலைஞர் திரு.தம்பிமுத்து என்பவரின் மகனாக 1934 ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது தந்தை கலைஞர் தம்பிமுத்து அவர்கள் நாடகங்களை நெறிப்படுத்துவதிலும் ஒப்பனை மற்றும் "மேடையலங்காரம்" போன்றவற்றிலும் தலைசிறந்து விளங்கினார். இவர் தயாரித்த பல நாடகங்கள் தம்பலகாமம் கோயில்-குடியிருப்பில் மேடையேற்றப்பட்டு அமோக ஆதரவைப்பெற்றன.

கலாபூசணம் அமரர் த.சித்திஅமரசிங்கம் அவர்கள் 1957 ஆம் ஆண்டில் இலங்கை எஸ்.எஸ்.ஸி.ஆங்கிலப் பரீட்சையில் தேறியதுடன் 1957 ஆம் ஆண்டில் தமிழகம் சென்று சென்னை மெற்றிகுலேசன் பரீட்சையிலும் தேறினார்.

ஐந்து வயதிலிருந்தே இவர் தந்தையின் நாடகங்களில் நடிக்கத் தொடங்கி விட்டார் எனச் சொல்லப் படுகிறது. 1952 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை மட்டத்தில் பாடசாலை நாடகங்களை தயாரித்தும் நெறிப்படுத்தி-யுமுள்ளார். சர்வதேச சிறுவர் தினத்தில் ஸ்ரீஇராமகிருஷ்ண மிசன் இந்துக்-கல்லூரியில் சித்திஅமரசிங்கம் மேடையேற்றிய நாடகம் பலராலும் பாராட்டப்பட்டது. இதே கல்லூரியில் தொடர்ந்து மேடையேற்றப்பட்ட "சோக்கரடீஸ்" "தொழிலுக்குத் தொழில்" ஆகிய நாடகங்கள் இவருக்குப் பெரும் புகழைத்தந்தன. இக்காலப்பகுதியில் இலங்கை வானொலிப் புகழ் (சானா) சண்முகநாதன் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றார்.

1958ல் திருகோணமலையில் ''கலைவாணி நாடகமன்றம்'' ஆரம்பிக்கப்பட்டது. இம்மன்றத்தில் இணைந்து கொண்டு இம்மன்றத்தால் மேடையேற்றப்பட்ட அனைத்து நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றார். 1960களில் "அமரன் ஸ்கிறீன்" என்றொரு நாடகமன்றத்தை உருவாக்கி "குத்து விளக்கு'' என்ற நாடகத்தை மேடையேற்றினார். இந்த நாடக மன்றத்தால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்கள் இவர் நடிப்பாற்றலை வெளிப்படுத்தின.

நாடகவிற்பனர்களான மௌனகுரு சிதம்பரநாதன் ஏ.ரி.பொன்னுத்துரை ஜெயசங்கர் சிங்களக் கலைஞர்களான வசந்த பண்டார, ஜயல்ல றோகண ஆகியோர்களது நாடகப்பட்டறைகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுள்ளார்.

1969களில் சித்தி அமரசிங்கத்தின் கவனம் வில்லிசையில் திரும்பியது. 1991இல் "கலாவிநோதன் வில்லிசைக் குழு" என்ற பெயரில் பல வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

1978களில் ஈழத்து திரைப்-படத்துறையிலும் இவர் தடம் பதித்துள்ளார். இதே ஆண்டில் ஈழத்தில் வெளியாகிய "தென்றலும் புயலும்" என்ற திரைப்படத்தில் நகைச்சுவைப் பாத்திமேற்று நடித்துப் பலரதும் பாராட்டுதலைப் பெற்றுள்ளார்.

1947இல் "ஈழத்து இலக்கியச் சோலை" என்ற அமைப்பை உருவாக்கி இவற்றினூடாக ஏறக்குறைய இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். ஈழத்தில் இலைமறை காயாக இருந்த எழுத்தாளர்களை வெளியுலகுக்கு அறிமுகம் செய்த பெருமை இ[illegible] புத்தகங்களை [illegible] பாடசாலைகள் தோறும் சென்று விற்பனை செய்வதில் வல்லவராக இருந்தார்.

திருகோணமலையில் சிவயோக சமாசத்தை ஸ்தாபித்த ஸ்ரீமத் ஸ்வாமி கெங்காதரானந்தாஜி அவர்களின் முக்கிய சீடர்களில் ஒருவராக தனது இறுதிகாலம்வரை வாழ்ந்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் "ஞானம்" மாத இதழ் ஏப்ரல் 2005இல் சித்தி அமரசிங்கம் அவர்களின் பணியைப் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டு அவரைக் கௌரவித்தது. இக் கட்டுரை சித்தி அமரசிங்கத்தை அவர் வாழும் பொழுதே வாழ்த்துவதாக அமைந்திருந்தது.

இத்தகைய சிறந்த கலைஞரை திருகோணமலை திருமறைக்கலா மன்றம் 2001இல் நடத்திய தமிழ்விழாவில் வைத்து வாழ்த்திக் கௌரவித்தது. கொழும்பு தமிழ்ச்சங்கம் 22.05.2004இல் "முத்தமிழ் மாமணி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 16.10.2006இல் வடக்குக்கிழக்கு மாகாண தமிழ்விழாவில் வைத்து 2006ஆம் ஆண்டிற்கான ஆளுநர் விருது வழங்கப்பட்டது.

*எல்லாவற்றிற்கும் மகுடமாக அரசு இவருக்கு 22.05.1999இல் கலாபூசண விருதை வழங்கிக் கௌரவித்தது.*

தம்பிமுத்து அமரசிங்கம் தனது வாழ்வில் புரட்சிகரமாக இணைந்த மனைவியின் பெயரையே தனது பெயருடன் இணைத்துப் பின்னாளில் சித்தி அமரசிங்கமானார். இறுதிவரை இ[illegible] பெயருடனேயே தனது [illegible] மேற்கொண்டார்.

ஈழத்துக் காந்தி என அனைவராலும்



போற்றப்ப[illegible] காந்தி ஐயா அவர்கள் இவர் பற்றிக் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்தை இங்கே நினைவுபடுத்துதல் சாலப்பொருந்தும் என நம்புகிறேன்.

"துணைவியார் சித்தி அம்மா அவர்கள் ஐயாவின் எல்லாப் பணிகளிலும் இன்ப துன்பங்களிலும் சரி பங்கேற்று உறுதுணையாகவும் ஒற்றுமையாகவும் சமூகத்திற்கு முன்மாதிரியாகவும் வாழ்ந்து நல்லறமாகிய இல்லறத்தை இனிதே நடத்திவந்தார்கள். ஐயாவின் அளவற்ற தொண்டுகளுக்கெல்லாம் அம்மாவின் ஒத்துழைப்பும் ஊக்கமுமே காரணமாகும்."

பிற்காலத்தில் இத்தகைய சிறந்த கலைஞர் சித்தி அமரசிங்கம் அவர்கள் நோய்வாய்ப்பட்டு அடிக்கடி கொழும்புக்கு போய் வந்து-கொண்டிருந்தார். இதய நோயால் அவர் அவதிப்பட்டார். டொக்டர் பாலசுப்பிர-மணியம் அவர்களிடம் சிகிச்சை பெற்று வந்தார். இறுதியில் கொழும்பிலேயே தமது இலக்கிய நண்பர்களின் சந்திப்பிலேயே தனது இறுதி மூச்சை விட்டார்.

கொழும்பில் பலரும் போற்றும் வண்ணம் அவரது இறுதிச்சடங்குகளை அவரது இலக்கிய நண்பர்களான திரு. பஞ்சாட்சரவேல், திரு.சிவபாதவிருதயர், டொக்டர் பாலசுப்பிரமணயம் போன்றோர் செய்தனர்.

நாடக நடிகனாக தயாரிப்பாளனாக நாட்டுக்கூத்துக் கலைஞனாக வில்லிசை மன்னனாக ஆவணக்காப்பாளனாக இலக்கிய ஆர்வலராக பல்துறை ஆற்றல்கொண்ட சித்தி அமரசிங்கம் அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பெரும் தொண்டினை எவராலும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

*தொடரும்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான். அவள் அப்போதும் சிறுபிள்ளைபோல் குனிந்த தலை நிமிராமல் மண்ணைச் சுட்டுவிரலால் கிளறிக்கொண்டே-யிருந்தாள்.

அரச குலத்தவர்கள் வேறு குலத்தில் பெண் கொள்ள முடியாது என்று அப்பா சொன்னார். அவள் குரல் தளம்பியது. தலையை நிமிர்த்தி ஆற்றுக்காகத் திரும்பியவள் ஒரு கையால் கன்னங்களில் வடிந்த கண்ணீரை மாறி மாறி துடைத்துக்-கொண்டாள்.

நியதி அப்படித்தான்... நான் மறுக்கவில்லை. ஆனால் நாம் நியதிகளை மாற்றலாமல்லவா?

அவள் தலை அவன் பக்கம் வேகமாகத் திரும்பியது. அவள் கண்களில் ஒரு எதிர்பார்ப்பு பளிச்சிட்டது. உண்மைதான் நமக்கு வேண்டுமென்றால் நியதியை மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்... மாற்றிக்கொள்வோம்.

அதெப்படி ...? அவளுக்கு ஒரு நம்பிக்கை உதயமானாலும், சந்தேகம் அதைத் திரைபோட்டு தடுக்கப்பார்த்தது.

வழிவரும்...! நான் ஒரு பயணம் செல்ல வேண்டியிருக்கிறது. ம்கூம் பயப்படாதே....... அதிக தூரமில்லை... ஒரு மூன்று நான்கு நாளாகும்... அதற்கு முன் உன்னிடம் சில வேண்டுகோள்... என்ன? என்பதுபோல் அவனைப் பார்த்தாள். உனக்குத் தளபதி உதயகுமரனைப் பிடிக்குமா? சாதாரண வீரன் குமரனைப் பிடிக்குமா?

ஏன் தயக்கம் சொல்... உன்னைக் கரம்பிடிப்பவன் ஒரு சாதாரண வீரனாக இருந்தாற் போதுமா? இல்லை தளபதியாகத்தான் இருக்க வேண்டுமா? அவள் விழியில் வழிந்த நீரைத் துடைத்துவிடத் துடித்த கரங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டான்.

இதுவரையில் எனக்குத் தளபதி யாரென்றே தெரியாது. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படவே மாட்டான். எனக்குத் தெரிந்தவர் ஒருவர்தான்! இதோ இந்த மண்ணில் என்னோடு கூடஇருந்து பாடி மகிழ்ந்த அந்த கோட்டை வாலிபனைத்தான் என் மனதுக்குப் பிடிக்கும்.

அப்படியென்றால் சில சமயம் நாம் வேறிடம் சென்று வாழ வேண்டிவரும்.. நம் சொந்த பந்தங்களை இழக்க வேண்டிவரும்... நம் சுற்றஞ் சூழலை மறக்க வேண்டிவரும் நீ ... தயாரா?

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 12

## வரலாற்று நாவல்

அவள் குழப்பமாகப் பார்த்தாள்.

அவசரமில்லை உனக்குச் சில நாள் அவகாசமிருக்கிறது.

சிந்தித்துப்பார்..

நான் நாளை மறுநாள் குதிரைப்படையுடன் சதுர்வேதமங்கலம் போகிறேன்.. நான்மறை ஓதும் அந்தணர் வதியும் அந்த ஊரில் வேதாகம மகாநாடு ஒன்று நடக்கப்போகிறது. இந்து மத அறிஞர்களுக்கும் இந்து கலாசார நிபுணர்களுக்கும், யோகிகள் மடாதிபதிகளுக்கும், கோட்டை தளபதிகளுக்கும் இந்துமத கலாசார அறிஞர் பெருமக்கள் பலருக்கும், ஊர் முக்கிய பிரமுகர்களுக்கும் ஓலைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதில் மகாநாட்டிற்கு கலிங்க மன்னர் விஜயவாகு அவர்களே தலைமை தாங்குவார் எனக் கூறப்பட்டிருக்கிறது. எனவே நான் போகின்ற இந்தப் பயணத்தில் மன்னரைச் சந்திக்க நிறைய வாய்ப்புக் கிடைக்கும். நான் அவரைச் சந்தித்துப் பேசினால் நம் திருமணத்திற்கு சம்மதம் கிட்டவே செய்யும் என்பது என் எதிர்பார்ப்பு. இதை உன்னிடம்சொல்லி விடைபெற்றுப்-போகவே நான் ஓடி வந்தேன்.

ஒரே மூச்சில் உணர்ச்சியோடு பேசிமுடித்தான். அவன் பேசிக்கொண்டு போகும்போது அவன் முகத்தில் ஓடிய உணர்ச்சி மாற்றங்களையும், வார்த்தைகளில் எதிரொலித்த நம்பிக்கையையும் கண்வாங்காமல் அவள் உள்வாங்கிக் கொண்டிருந்தாள். செவிகள் அவன் வார்த்தைகளுக்குக் கூர்மையாக இருந்தன., கண்கள் அவன் முகத்தை மொய்த்துக் கொண்டிருந்தன.

என்னை மறந்து விடமாட்டீர்களே?

என்னதான் நம்பிக்கை மனதில் ஊறினாலும் அவள் ஒருபெண்தானே?

என்னை இன்னுமா நம்பவில்லை? அவன் குரலில் தெரிந்த வேதனை் அவளை உசுப்பியது.

இல்லை... உங்களை நம்பாமலில்லை... பரிபூரணமாக நம்புகிறேன்.அவசரமாக மறுத்தாள். என்ன இருந்தாலும் நான் ஒரு பெண்தானே... உயர நிற்கும் நீங்கள்.......

பயப்படாதே...... சங்கீதத்தில் இணைந்த எங்கள் உறவை யாராலும் பிரிக்கமுடியாது. தைரியமாக இரு... நான் நல்ல சேதியோடு திரும்பி வந்து உன்னைச் சந்திக்கிறேன்.

விரைந்து குதிரையில் ஏறியவன், அவளைப்பார்த்து புன்னகைத்துவிட்டு குதிரையை திருப்பிக்கொண்டு அதை ஓடவிட்டான். அவன் சென்று மறையும்வரை பார்த்துக்கொண்டே இருந்தவள் மனது மகிழ்சியால் நிறைந்திருந்தது. அவனது மனக்கருத்தை அவன் சொல்லக்கேட்டதில் ஏற்பட்ட மகிழ்ச்சி மெல்ல இரு கைகளையும் மார்பின்மேல் வைத்து அழுத்தி கண்களை மூடி அந்தமகிழ்ச்சியை ஆத்மார்த்தமாக அனுபவித்துக்கொண்டாள்.

*சென்ற வாரம்...*

*அதுமட்டுமல்ல இசை மீது எனக்கிருந்த ஆவலுக்கு நீ ஒரு வழிகாட்டி என்றும் ஆசான் என்றும் கருதினேன்.*

திடீரென கண்களை விழித்து அந்த நிலையிலிருந்து விடுவித்துக்-கொண்டவள் மனதில், ஐயோ அப்பாவும் அத்தையும் தேடப்-போகிறார்களே, என்ற எண்ணம் தோன்றியது. எட்டிக் குதித்து நடை போட்டு வீட்டுக்குப் புறப்பட்டாள்.

தம்பன் கோட்டையை விட்டுப்புறப்பட்ட அந்த அணி சதுர்வேத மங்கலம் என்ற கந்தளாயை நோக்கி நகர்ந்தது. தளபதியைப்போல வீரர்களும், குதிரையை ஓட விரட்டாமல், சிறு பாய்ச்சலிலேயே செல்ல அனுமதித்தனர்.

பயணம் சேனை வழிக்கல்வழியூடாகச் செல்லலாயிற்று. சேனைவழிக்கல்வழி சதுர்வேத மங்கலத்திற்கும் (கந்தளாயிற்கும்) தம்பலகாமத்திற்கும் இடையில் இரு ஊர்களையும் இணைக்கின்ற நெடுஞ்சாலையாகும். இரண்டு ஊர்களுக்கும் இடையே 24 மைல் தூரம் அடர்ந்த காடு ஆகும். இந்தப் பெரும் வனத்தை ஊடறுத்து அமைவதுதான் இந்த ஒரே பாதையான சேனைவழிக்கல்வழி. பொதுவாக இது மாட்டு வண்டிப்பாதையாகவே அமைந்திருந்தது.

*தொடரும்...*




# வரலாற்றில் திருக் கோணமலையல்ல: திருகோணமலையே வாழும்...

திருப்புகழிலில் வேறு எவ்விடத்திலும் இத்தலம் பற்றியோ இப்பெயர் பற்றியோ குறிப்பிடப்-படவில்லை. தவிர அதில் ''திருக்கோணமலை'' என்றில்லை ''திருக்கொணாமலை'' என்றுதான் இருக்கிறது. கி.பி 7ம் நூற்றாண்டிலும் கி.பி 13ம் நுாற்றாண்டிலும் கோணேஸ்வரம் அமைந்துள்ள இடத்தின் பெயர் "கோணமாமலை" என்றிருப்பதை சான்றுகளோடு மேலே காட்டினோம். அருணகிரி நாதர் கி.பி.15ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனவே அவர் கோணமாமலையில் இருந்த கோயில் பற்றி அறிந்திருந்தவராக இருந்திருக்கலாம் என்பது ஏற்புடைய-தன்று. திருப்புகழின் சந்தத்திற்கு அமைவாக அவர் "கோணமாமலை" "கொணாமலை" எனக்குறிப்பிடுகின்றார். பக்தியியக்கத்தன் மரபின் 'படி தலங்களை "திரு" எனும் புனித பகுதியோடு சேர்த்து குறிப்பிட விரும்பியிருக்கிறார். அதன்போது சந்தத்திற்கு அமைவாக "திருக்-கொணாமலை" எனக் குறிப்பிட்டுள்ளார் என்பதுதான் எற்புடையது. ஏனெனில் கோணேஸ்வரத்தைக் குறிக்கும் 7ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட எல்லாச் சான்றுகளும் கோணமாமலை என்றே குறிக்கின்றன.' இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேற்சொன்ன சான்றுகளின் படி ''திருகோணமலை'' என்ற பெயர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகால பழமையானது. ஆயிரம் வருடம் வரலாற்றில் வாழந்த பெயராக இருக்கிறது. இந்த ஊரின், இந்த மக்களின் தனித்துவத்தையும் சகிப்புத் தன்மையையும் சொல்கின்ற பெயராக இருக்கின்றது. அதை தனியே இந்துத் தமிழுடன் நெருக்க-மாக்குவதற்காக திருக்கோணமலை ஆக்குவது நியாயமற்றது. ஒரு சாராரின் சுயநலத்தின் பாற்பட்டது. ''திருக்-கோணமலை'' என்றழைக்கபடவும் எழுதப்படவும் தொடங்கி ஒரு நூறு வருடம் இருக்குமா அதை அழுத்தமாக வழியுறுத்தத் தொடங்கி 50 ஆண்டுகள்தான் இருக்கும் வெறும் 50 ஆண்டுகால பழக்கத்திற்காகவும் ஒருசாராரின் நன்மையை மட்டும் கருத்தில் கொண்டு 900ம் வருடமாக நாம் பெருமையாக வாழ்ந்த வாழ்க்கைத்தன்மையை அழிக்கிறீர்கள். எமது வரலாற்றுப் பெருமையையும் சகிப்புணர்வுடைய வாழ்வையும் மறைக்கிறீர்கள்.

தவிர இன்று திருகோணமலையும் போய் திருக்கோணமலையும் போய் ''திருக்கோணமலைய'' என்றாகிக்-கொண்டு வருகின்றது. அதைக் காப்பாற்றுவதற்கு முடியாமலுள்ளது. ''திருக்கோணமலை'' என்பது உச்சரிப்பிலும், அதன் உருவாக்கத்தின் அடிப்படைத் தன்மையிலும் ''திருக்கொணாமலைய''வுக்கு மிக நெருக்கமாக அமைந்து உதவி செய்கிறது என்பதை பகுத்தறிவுள்ள எவரும் உணர்ந்துகொள்ள முடியம். இவற்றைத் தடுப்படுதற்கும் எமது வரலாற்று பெருமையும் சகிப்-புணர்வுள்ள வாழ்வியலையும் தக்கவைத்துக் கொள்ள நாம் திருகோணமலையை ''திருகோண-மலை'' என்று அழுத்திச் சொல்வதே உதவிசெய்யும். திருகோணமலை வரலாற்றை பரந்த தேடலுடன் நுட்பமாக எழுதியுள்ள கலாநிதி க.சரவணபவன் திருகோணமலையின் வரலாற்றைக் கூறும் தனது இரு நூல்களின் பெயர்களையும் ''வரலாற்று திருகோணமலை, காலனித்துவ திருகோணமலை'' என்று "திருகோண-மலை" என்ற பெயரைக் குறித்துள்ளமை அறியாமையினால் அல்ல.

வரலாற்றில் திருக்கோணமலை இருக்கவில்லை திருகோணமலையே இருந்தது. திருகோணமலையில் ஒருசார்பு இருக்கவில்லை சகிப்புத்-தன்மையே இருந்தது.

**சத்தியன்**

# கிழக்கிலங்கைத் தமிழர்களின் வரலாறு ஒரு நோக்கு

கிழக்கிலங்கைத் தமிழர்களின் வரலாறு உள்ளூர்க் கதைகளாலும், உள்ளூர் இலக்கியங்களினாலும், குடியேற்றக் கால ஆவணங்கள் மூலமாகவும் அறியப்படுகிறது. கிழக்கிலங்கைத் தமிழர்கள் எனப்படுவோர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பிரதேசங்களில் வாழும் இலங்கைத் தமிழர்களைக் குறிக்கின்றது.இவர்களின் கலாசாரம் பேச்சுத் தமிழ் மற்றும் ஏனைய பிரதேச பழக்கவழக்கங்கள் மூலமாக தனித்துவமாக நோக்கப்-படுகிறார்கள்.

### *ஆரம்பகாலக் குடியேற்றம்*

தமிழ்நாட்டிலும் வட இந்தியாவிலும் காணப்படும் பிரதேச அடக்கு முறைக்கு ஒப்பான செயற்பாடுகள் கிழக்கிலங்கைக் கரையோரத்திலுள்ள கதிரவெளி பிரதேச அகழ்வாராட்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டன.அவை கி.மு. 2 தொடக்கம் கி.பி. 2ம் நூற்றாண்டு காலப்பகுதிக்கு உரியதாகும். இது தமிழர்கள் எப்போது இலங்கையில் குடியேறினார்கள் என்பதை குறிப்பிடாத போதும் தொடர்ச்சியான தென்னிந்தியப் படையெடுப்பின் பின் கி.பி. 1 தொடக்கம் 13ம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளில் குடியேற்றம் நடந்தது. இக்காலப்பகுதியில், தமிழ் அரச ஆட்சியில் தமிழ் சைவக் கலாசாரம் கிழக்கில் பேணப்பட்டு சமூக வளர்ச்சியோடு ஒன்றாக வளர்ந்தது. 6ம் நுாற்றாண்டு காலப்பகுதியில் திருகோணமலை கோணேசுவரர் கோயிலுக்கும் மட்டக்களப்பு (தற்போதைய அம்பாறை மாவட்டத்திலுள்ள) திருக்கோவிலுக்கும் படகு மூலம் சிறப்பான கடல்வழி காணப்பட்டது. யாழ்ப்பாண இராசதானி 13ம் நூற்றாண்டில் உருவாகி தமிழ் இந்து சமூக அமைப்பு உருவாகு முன்னமே, கி.பி. 11ம் 12ம் நூற்றாண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் பெரும் தமிழ் சமூகம் காணப்பட்டது.

**செந்தூரன்** *(இன்னும் நடுவோம்)*

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசின் உலக வலம்

## 4000 ஆண்டுகளின் பின் அதிகரித்தது பூகோள வெப்பம்

உலகின் வெப்பநிலை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்வடைந்துள்ளது. குறைந்த பட்சம் 4000 வருடங்களில் இல்லாத அளவுக்கு வெப்பநிலை உயர்வடைந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மனித இனத்தின் தவறான செயல்பாடுகளால் வெப்பநிலையில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். இந்த வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே செல்லும். இதுவரை நவீன புவியியல் யுகத்தில் நாம் கண்டிராத அளவு அதிக வெப்பத்தை நாம் உணர்வோம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## பாலியல் வல்லுறவிலிருந்து பாதுகாத்துக்கொள்ள உள்ளாடை

பாலியல் வல்லுறவிலிருந்து தற்காப்பை ஏற்படுத்திகொள்ளும் வகையில் பெண்களுக்கான உள்ளாடை ஒன்றை இந்திய பொறியியல் துறை மாணவர்கள் தயாரித்துள்ளனர். பெண்களிடம் யாரேனும் தவறாக நடக்க முயற்சிக்கும்போது, அவர்கள் இவ் ஆடையினூடாக 3,800 கிலோவோல்ட் அதிர்ச்சியை எதிர்கொள்வர் என தெரிவிக்கப் படுகின்றது. இவ் உள்ளாடையானது அதர்ச்சியினால் எதிரியை முடக்கிய பின்னர், செய்மதி வலையமைப்பினூடாக தானாகவே குறுந்தகவலை பொலிஸ் நிலையங்கள் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கு அனுப்பும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் ஆடையில் உணர்த்திகளானது மார்பு பகுதியில் பொருத்தப்பட்டுள்ளன. வன்முறையான அழுத்தம் காரணமாக குறித்த ஆடைகளில் பொருத்தப்பட்டுள்ள உணர்த்திகள் 82 வரையிலான மின்சார அதர்ச்சிகளை தாக்குவோர் மீது தரும் என தெரிவிக்கப்படுகின்றது.

## சுவிஸ் வங்கிகள் தனது ரகசியக் காப்பு நடைமுறைகளை மாற்ற வேண்டிய அவசியமில்லை

சுவிட்சர்லாந்தின் ஜனாதிபதி உவேலி மாரர் (Ueli Maurer), சுவிஸ் வங்கிகள் தனது ரகசியக் காப்பு நடைமுறைகளை மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். வங்கி ரகசியம் என்பது மருத்துவ ரகசியம் போன்றது இதனை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்றும் வலியுறுத்தினார். சுவிட்சர்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக இல்லை என்பதால் சுவிஸ் வங்கிகளில் பாதுகாக்கப்படும் ரகசியப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஏனெனில் அமெரிக்காவின் வெளிநாட்டு வங்கிக்கணக்கு வரி ஒத்துழைப்புச் சட்டத்திற்கு, மதிப்பளித்து சுவிஸ் அரசு நிறைய ஒத்துழைப்பு தந்துவிட்டது.

மேலும் வரி ஏய்ப்புப் பற்றிக் கேட்டதற்கு இதுபோன்ற தவறுகள் எல்லா துறைகளிலும் உண்டு. இதனைச் சரி செய்ய முயல வேண்டும் என்று பதிலளித்துள்ளார்.

## மாணவர்கள் பள்ளிக்குச் செல்லத் தடை

பாகிஸ்தானிலுள்ள மிரான்ஷா நகரில் மாணவர்களைப் பள்ளிக்கு செல்ல தடை விதித்திருக்கிறோம் என்று தலிபான் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த வரிசிஸ்தான் பகுதியில் உள்ள மிரான்ஷா நகரில் இயங்கும் சோதனைச் சாவடி ஒன்றின் அருகே, கடந்த மாதம் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 24 பாதுகாப்பு வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 40 பேர் காயமடைந்தனர். எனவே பாதுகாப்பு கருதி, அரசுப்படையின் வீரர்கள் மிரான்ஷா நகரத்தில் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். அதனை ஆட்சேபித்த தலிபான் இயக்கம், அந்தத் தடைகளை நீக்கும் வரை அங்குள்ள பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லக்கூடாது என்று அறிவித்துள்ளனர்.

அதனை மீறினால், தலிபான் குழு தக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் மிரட்டியுள்ளனர். பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், சில இடங்களில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## மலைமுரசின் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் வெற்றியாளர்கள்!!!

| | | |
|---|---|---|
| பயிற்சி - 01 | : | செல்வி. ர. வைஷ்ணவி<br>பொற்கேணி, தம்பலகாமம்<br>தி/குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயம் |
| பயிற்சி - 04 | : | ஜெ. டனுஷிக்கா<br>32/5 உவர்மலை மத்திய வீதி<br>தி/உவர்மலை விவேகாநந்தாக் கல்லூரி |
| பயிற்சி - 05 | : | ச. ஹரிணி<br>256/11 B, தில்லைநகர், உட்துறைமுக வீதி<br>தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி |
| பயிற்சி - 06 | : | சி. மிர்ஷாளினி<br>140, வைத்திய சாலை வீதி, திருமலை.<br>தி/மெதடிஸ்த மகளிர் கல்லூரி. |
| பயிற்சி - 07 | : | ஆர். அபிலக்ஷிகா<br>389, கன்னியா வீதி, பாரதிபுரம், திருகோணமலை<br>தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி |

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 11

பிரதீபா

1. பின்வரும் கவிதையை வாசித்து விடை தருக.

சித்திரை மாதம் முழு நிலவில்
சிரிக்கும் அலைகள் கரையிடிக்கும்
தத்திடும் ஏழு கன்னியரின்
தவமும் இசையில் உயிர் துடிக்கும்

சித்திரை மாதம் முழு நிலவில்... என்பதன் கருத்து எதுவாக இருக்கக்கூடும்?
1. சித்திரை மாதத்தில் இரவில் தோன்றும் நிலா
2. சித்திரை மாத பௌர்ணமி நிலா
3. சித்திரைப் புதுவருட தினத்து பௌர்ணமி நிலா

**பின்வரும் பந்தியை வாசித்து 2,3,4 ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

காடு, மலை, மேடுகளில் கூட்டத்தாருடன் சுற்றி வருவேன். இயற்கைக் காட்சிகளை கண்குளிர கண்டு வருவேன். பசியெடுத்தால் புத்தம் புதிய இனிய கனிகளை உண்டு மகிழ்வேன். பகல்பொழுது முழுவதும் ஆனந்தமாக களிப்பேன். இரவானதும் மரப்பொந்தினுள் வந்து தங்கிவிடுவேன். எனது கடந்த கால வாழ்க்கையை எண்ணி உவகை அடைகின்றேன். என்னிடமிருந்த இன்பம், மகிழ்ச்சி என்பன ஒரு நொடியில் பறிக்கப்பட்டுவிட்டது.

2. இப்பந்தியில் யாரைப் பற்றி விபரிக்கப்படுகின்றது?
1. அகதி 2. ஒரு பறவை 3. ஒரு விலங்கு

3. இங்கு கூறப்படுபவர் தற்போது வாழுமிடம்?
1. மரப்பொந்து 2. கூறமுடியாது 3. அகதி முகாம்

4. இது ஒரு................ 1. சுயசரிதை 2. விடுகதை 3. பேட்டி

5. "விகடகவி" என்பதைச் சரியாகக் குறிக்கும் குறியீடு?
1. கதடுதிகி 2. கதருதக 3. தகவிதர

6. பின்வரும் சொல் வரிசைகளில் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசை எது?
1. வொலிபோல், எல்லே, கபடி, கிரிக்கற், வலைப்பந்து
2. யானை, வௌவால், எலி, திமிங்கலம், நீர்நாய்
3. இரும்பு, தங்கம், வெள்ளி, உலோகம், அலுமினியம்

7. வித்தை அகற்றிய பின், உணவாக சமைக்கும் காய்கறிவகை?
1. ஈரப்பலா 2. புடோல் 3. கத்தரிக்காய்

8. குரக்கன் போன்ற வித்தின் வடிவத்தையுடைய வித்து எது?
1. கடுகு 2. மிளகு 3. பப்பாசி

9. வித்து முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
1. வளி 2. நீர் 3. சூரியஒளி

10. நன்றாக நிழல் தரும் தாவரம் எது?
1. அசோக் மரம் 2. ஆலமரம் 3. புங்கை மரம்

11. அடிமரத்திலும், வேரிலும் காய்க்கும் மரம் எது?
1. நெல்லி 2. ஜம்பு 3. பலா

12. மாலா தினமும் பாடசாலைக்கு வந்து பாடங்களைப் படிப்பாள். இவள் படித்தவை அனைத்தையும் மனதில் நன்றாக பதிய வைத்திருப்பாள். இதனால் இவளுக்கு படித்தவை ஒருநாளும் மறந்து போவதில்லை. இதனை விளக்கும் உவமைத்தொடர்?
1. குன்றின் மேல் விளக்குப் போல 2. நுனிப்புல் மேய்ந்தாற் போல 3. சிலையில் எழுத்துப் போல

13. பரப்புப் பலகையைப் பயன்படுத்தும் தொழில் எது?
1. உழவுத் தொழில் 2. உலோகத் தொழில் 3. நெசவுத் தொழில்

14. கீழ் உள்ள வித்துக்களில் மிக விரைவாக முளைக்கும் வித்து எது?
1. பயறு 2. தாமரை 3. கத்தரி

15. கிளைத் துண்டுகளை நடுவதன் மூலம் புதிய கன்றை பெறத்தக்கது?
1. பப்பாசி 2. இராசவள்ளி 3. மரவள்ளி

16. சிகிரியா ஓவியத்தில் உள்ள பெண்கள் வைத்திருக்கும் மலர்?
1. ரோஜா 2. நீலோற்பலம் 3. ஓக்கிட்

17. உப்புத்தூள் விரைவாகக் கரைவது எதில்?
1. வெந்நீரில் 2. தண்ணீரில் 3. குளிர்நீரில்

18. ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நின்ற போது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை?
1. 11 2. 12 3. 13

19. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 90 எனின், ரூபா 306க்கு வாங்கக் கூடிய அரிசி எவ்வளவு?
1. 3கிலோ 600கிராம் 2. 3கிலோ 400கிராம் 3. 3கிலோ 500கிராம்

20. வகுப்பறை ஒன்றிலுள்ள கதிரைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அங்குள்ள மேசைகளின் எண்ணிக்கையானது கதிரைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 5 குறைவாகும். இவ்வாறு மூன்று வகுப்பறைகளில் காணப்பட்டன. எனின், அம்மூன்று வகுப்பறைகளிலும் உள்ள கதிரைகளினதும், மேசைகளினதும் எண்ணிக்கை முறையே?
1. 135, 210 2. 120, 135 3. 135,120

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 ..... முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவுரிமைக் குற்றச்சாட்டு நாட்டுக்கு அரசிற்கு எதிரானதா ?

மாயன்

மனிதவுரிமைக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அமெரிக்க அரசால் முன்மொழியப்பட்ட பிரேரணையானது அங்கத்துவ நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பும் மனிதவுரிமைகள் தொடர்பான எவ்வித முன்னேற்றங்களையும் அல்லது எவ்விதமான சாதக அறிகுறிகளையோ இலங்கை வெளிக்காட்டுவதாக இல்லை. அதற்க மாறாக ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கைகளை அந் நாடுகளுக்கு எதிராக விடுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர் அரசின் சில சிரேட்ட அமைச்சர்கள்.

இலங்கை அரசு, மனிதவுரிமை விடயங்களிற் பொறுப்புடன் செயற்பட்டு தான் அவ்வாறு அரசு செயற்படுகின்றது என்ற அறிக்கையினை எதிர்வரும் செம்டெம்பரில் நடைபெறவுள்ள மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க வேண்டிய சர்வதேசக் கடப்பாட்டைக் கொண்டுள்ளது. இக் கடப்பாட்டை அமெரிக்க முன்மொழிவால் வெற்றி கொள்ளப்பட்ட பிரேரணை தனது வாசகங்களுள் ஒன்றாகக் கொண்டுள்ளது.

எனினும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை ஐக்கிய நாடுகள் சபைக்கு எந்தவொரு அறிக்கையையும் தான் முன்னிலைப்படுத்தப் போவதில்லை என இலங்கை அரசின் வெளிநாட்டு விவகார அமைச்சர் கடந்த வாரம் திட்ட வட்டமக அறிவித்திருந்தார். அதனையொட்டி பல அமைச்சர்கள் ''உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது" " எமது பிரச்சனைகளை நாமே தீர்த்துக் கொள்கின்றோம்'' போன்ற கருத்துக்களை தமது அரசியல் அரங்கில் வெளிப்படுத்திக் கோண்டேயிருந்தார்கள். மிக அண்மையில் சிரேட்ட அமைச்சர் திஸ்ஸ விதார அவர்களும் " மேற்குலகின் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கையை விழுத்தவே மனித உரிமை என்னும் ஆயுதத்தை" மேற்குலகு பாவிக்கின்றது என அறிக்கையிட்டுள்ளார். அத்துடன் இம் மேற்குலக நாடகளே உலகில் மிகப் பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் காட்டமான குற்றச் சாட்டுக்களை வெளியிட்டுள்ளார்.

ஆனால் மேற்குலக நாடுகளோ குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் போது ஒரு வார்த்தைப் பிரயோகத்தையும் ஆலோசனைகளை முன்வைக்கும் போது மற்றோர் வார்த்தைப் பிரயோகத்தையும் பாவிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசிற்கு எதிராகவும் ஆலோசனைகள் இலங்கைக்கானவையாகவும் இருப்பதை நாம் உற்று நோக்கலாம்.

இவ்வாறான இரு வார்த்தைப் பிரயோகங்களும் ஏன் மேற்குலகால் பாவிக்கப்படுகின்றன என்பதை நாம் உற்று நோக்க வேண்டும்.

இலங்கை என்னும் பதமும் இலங்கை அரசு என்னும் பதமும் இருவேறான தொனிகளில் அல்லது கருத்துக்களிலேயே பிரயோகிக்கப் படுகின்றன.

இலங்கை என்பது பல்லின மக்கள் வாழும் ஓர் நாடு என்பது உலகறிந்த உண்மை. இந் நாட்டின் உரிமையாளர்கள் அல்லது ஆதிக்குடிகள் யார் என்பதை அரசினால் வெளியிடப்பட்டள்ள வரலாற்றுப் புத்தகங்களை விடுத்து உண்மை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் யாவருக்கும் தெரிந்து விடும்.

என்றாலும் கூட மிக இலகுவாக விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் விசயனின் இலங்கை வருகைக்கு முன் வாழ்ந்தவர்கள் யார் எனத் தெரிந்து கொள்ள முயற்சித்தால் உண்மை துலாம்பரமாக வெளித்தெரிந்து விடும்.

உலக நாடுகளின் வளர்ச்சி என்பதைப் பார்ப்போமானால் அவ்வவ் நாட்டுக்குரிய ஆதிக் குடிகளின் கைகளில் அவர்களின் நாடகள் இல்லை என்பதே உண்மை. இதனை மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதற்குக் காரணம் உலக நாடுகளின் வளர்ச்சியும் அபிவிருத்தியுமே ஆகும். இதனால் புதிய பிரதேசங்களையும் வளம் மிக்க நாடுகளையும் நோக்கிக் குடிப்பரம்பல் நிகழ ஆரம்பித்தவுடன் அவ்வவ் நாடுகளுக்குரிய ஆதிக்குடிகளிடம் இருந்து அவர்களின் நாடுகள் பறிக்கப்பட்டு விட்டன.

ஆனால் இப்பறிப்பை உலகம் ஏற்றுக்கொள்ளத் தொடங்கிப் பல நூற்றாண்டுகள் கழிந்து விட்ட நிலையில் ஆரம்பத்தில் ஆதிக் குடிகளை அழித்து அவர்களின் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட கூர்ப்படைந்த இனங்கள் தற்போது அவ் ஆதிக்குடிகளுடன் சமாதானச் சகவாழ்வை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன. அவற்றையே நாம் மனித நாகரிக வளர்ச்சியின் ஓர் மைல் கல்லாகக் கருதத் தொடங்கியுள்ளோம். அத்துடன் இனக்கொலை நிகழ்வதைத் தடுப்பதற்காக நாடுகள் ஒரேகுரலில் தமது எதிர்ப்புக்களைப் பதிவுசெய்யவும் தொடங்கிவிட்டன.

இதனடிப்படையில் பார்ப்போமானால் இலங்கை என்ற பல்லின மக்கள் வாழும் நாட்டில் நடைபெற்ற இனப்படுகொலையை வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளத் தயங்கிவரும் வெளிநாட்டு அரசுகள் அதனை மறைமுகமாக தாம் பாவிக்கும் மேற்போந்த இரு வார்த்தைப் பதங்களான "இலங்கை" மற்றும் " இலங்கை அரசு" என்றவற்றின் ஊடாக பேசத் தலைப்படுகின்றன போலவே உள்ளன.

அதாவது இலங்கை என்ற பதத்தினைப் பாவிக்கும் போது அப்பதம் அந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மற்றும் ஏனைய இனங்கள் யாவற்றையும் குறித்து நிற்பதால் ஆரேலசனைகள் வழங்கும் போது அந்நாடுகள் இலங்கைக்ான ஆலோசனைகளை வழங்க முற்படுகின்றன.

ஆலோசனைகளை வழங்கும் போது இலங்கை என்ற பதத்தினைப் பாவிப்பதால் அதனை அனைத்தினங்களும் ஏற்று நடக்க வேண்டும் என்ற நோக்கினை அந்நாடுகள் கொண்டிருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் குற்றச்சாட்டுக்கள் இலங்கை அரசிற்கு எதிராகவே முன்வைக்கப்படுகின்றனவே தவிர இலங்கைக்குனு எதிராக அல்ல. ஏனெனில் இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் அவ்வாறு சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளின் பால் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக அனைத்து இனங்களும் உள்ளடக்கப்பட்டு விடுகின்றன. எனவே இங்கு இலங்கைக்கு எதிராகக் குற்றச்ாட்டைச் சுமத்த முனைந்தால், இனக்கொலைக்கு உட்பட்ட இனமான இலங்கைத் தமிழ் இனமும் பொறுப்புக் கூறும் நிலைக்கு ஆளாக வேண்டிவிடும். இதனைத் தவிர்ப்பதற்காகவே வெளிநாடுகள் குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசிற்கு எதிராக மட்டும் சுமத்திவருகின்றன.

அத்துடன் இனக்கொலைக்கான பொறுப்பை இலங்கை அரசு ஏற்க வேண்டுமே யொழிய இலங்கை நாடு அல்ல என்பதில் வெளிநாடுகள் தெளிவாக இருப்பதாய்த் தெரிகின்றது.

இங்கு உலக விடயமொன்றைக் கருத்திற் கொள்தல் நல்லது என்றே நினைக்கின்றேன்.

ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டில் இனப்படுகொலையை நிகழ்த்தி யிருக்குமாயின் அப்படையெடுத்த நாட்டின் மீது இனப் படுகொலைக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன உலக நாடுகள். இங்கு குற்றச்சாட்டுக்கள் அந்நாட்டின் மீதே வைக்கப்படுகின்றன. தனியே அந்நாட்டின் அரசின் மீது அல்ல. ஏனெனில் படையெடுத்த நாட்டிலுள்ள இன மக்கள் அனைவருமே அப்படை யெடுப்புக்கும் இனக்கருவறுப்பிற்கும் பொறுப்புடையவர்கள் என்பதாலேயே குற்றச்சாட்டுக்கள் அந்நாட்டின் மீது முற்றுமுழுதாகச் சுமத்தப்படுகின்றது.

அவ்வாறு சுமத்தப்படும் போது அந்நாட்டையும், அந்நாட்டில் கோலோச்சும் அரசையும் பிரித்துப்பார்க்க வெளிநாடுகள் முனைவதில்லை. அதற்கு உதாரணமாக பாலஸ்தீனத்தின் மீது நிகழ்த்தப்படும் மனிதவுரிமை மீறல்களுக்கு இஸ்ரேல் என்ற நாடே பொறுப்புக் கூறவேண்டியிருப்பதைக் காணலாம். அவ்வாறே பல்லின மக்கள் வாழம் அமெரிக்க நாடு ஆப்கானிஸ்தானின் மனித உரிமை மீறலுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நிலையிலிருக்கின்றது.

இவ்வாறு ஒரு நாடு மனித உரிமை மீறலுக்காகப் பொறுப்புக் கூற வேண்டியிருக்குமாயின் அந் நாட்டில் அரசுகள் மாறிக் கொண்டிருந்தாலும் அந்நாடுதான் பொறுப்பை எப்பொதுமே கூறக் கடமைப் பட்டிருக்கும்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இலங்கை அரசின் மீதே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் பட்டிருப்பதை நாம் கூர்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புச் சொல்லப் போவது இப்போது ஆட்சிக் கட்டில் அமர்ந்திருக்கும் அரசு மட்டுமே. ஏனெனில் இன்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கும் அரசானது தனது ஆட்சியதிகாரத்தை இழக்கும் போதும் தனது பொறுப்புக் கூறலிலிருந்து விடுபட முடிளாத நிலையிலிருக்கும். அவ்வாறானதொரு காலம் வரும்போது இனக்கருவறுப்புக்கான காலத்தில் யாரெல்லாம் முக்கிய அரசின் பதிவிகளை அலங்கரித்திருந்தாரோ அவரெல்லாம் தனிமனிதர்களாகக் கருதப்பட்டு உள்நாட்டு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நீதிமன்றங்களின் முன் இலகுவாக 'முன்னிலைப் படுத்தப்பட்டு விடுவார்கள்.

இதனைத் தவிர்ப்பதற்காகவே அரசிற்கெதிரான குற்றச்சாட்டுக்களை இலங்கையின் அரசு நாட்டிற்கு எதிரான குற்றச்சாட்டாகப் பொதுமைப்படுத்த முனைவதை காணலாம். "நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் " என்ற வாாத்தைப் பிரயோகத்தின் அடிநாதமும் இவ்விடயம் போலத்தான் இருக்கின்றது.

எனினும் காலம் யாருக்காகவும் காத்திருக்காமல் தனது கடமையினை நிறைவேற்றிவிடும்.

## மீள்வாசிப்பு

எனது மண்ணிற
மேசையின் மீது
நான்காய் மடிந்து
மின்விசைக் காற்றில்
படபடத்துக் கிடக்கிறது
உன் கடிதம்...
என் மனம் போல்
படபடத்துக் கிடக்கிறது.

வாசித்த பின்
கிழித்தெறிய
வேண்டியது அது..
எனினும் மீண்டும் ஒரு
முறை
படிக்கும் பேரவாவால்......
நீள்வதும் மீண்டும்
மடிவதுமாய்க் கை...

முதலாவது வாசிப்பின்
பின்
நாவில் எதுவுமின்றியே
தித்திக்கும்
உணர்வுகளும்...
இறக்கைகளின்றியே
பறக்கும் எண்ணங்களும்..
இன்னும்
வார்த்தைகளுக்கு
அப்பாற்பட்டதாய்
நினைவும்.. ..
வாசித்தபின் கிழித்தெறிய
வேண்டிய அது..........
நீள்வதும் மீண்டும்
மடிவதுமாய்க் கை. . .

அப்படி எதைத்தான்
எழுதிவிட்டாய் நீ ?

என் மீதுள்ள காதலை
வெறும்
வார்த்தைகளுக்குள்
அடைக்க முனைந்த
உனது
முயற்சியைத் தவிர
வேறு எதுவுமில்லை
அது.. ..

எனினும் மீண்டும்
வாசிக்கும் பேரவாவால்

என் மேசையின் முன்னே
கிடக்கிறது
அக்கடிதம்.

பெண்ணே... முதல்
முறை வாசித்த
உணர்வுகள் அழிந்த
பின்னே
மறுமுறை வாசிக்கும்
பெருவிருப்புக்
கொண்டே
முன் கிடக்கிறது கடிதம்.

என் மானுட வாழ்வின்
கடைசி
நிமிடத்தின் போதும்
முதல் முறை வாசித்த
உணர்வுகளை மீட்டும்
மனம். . . எண்ணம் . .
எல்லாமுமே
மீண்டும். .மீண்டும் முதல்
முறை வாசித்த
உணர்வுகளையே மீட்டும்

மீள் வாசிப்பென்பது
உன் கடிதத்திற்கும்
என் காதலுக்கும்
எப்போதுமேயில்லை.......
என் முன்னே கிடக்கிறது
நான்காய் மடித்த
உன் கடிதம்.. .. .. ..

இரண்டாவது
வாசிப்பிற்காய்

மாயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றச்சாட்டு...

குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது. கிழக்கு மாகா சபையின் தவிசாளரான ஆரியவதி கலப்பதி மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் சிரேட்ட அலுவலரான திரு. ஜெயலத் பாலசூரியவை அச்சுறுத்தியதாக ஆங்கில ஊடகம் ஒன்ற வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தான் சார்ந்துள்ள அரசியல் கட்சியின் ஆதரவாளர் ஒருவருக்கு சட்டவிரோத கல்லுடைக்கும் ஆலை அனுமதியினை வழங்கவேண்டும் என ஆரியவதி வேண்டிய போதும் அதனை சுற்றுச்சூழல் சட்டத்திற்கமைய வழங்க முடியாதிருப்பதாக அவ் அலுவலர் தெரிவித்திருந்தார்.

மார்ச் மாதம் 25ம் திகதி தொலைபேசியூடாக இவ் அரச அலுவலரை அச்சுறுத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன." சட்டப்படி வேலைசெய்ய முயன்றால் பல பிரச்சனைகளை" எதிர்கொள்ள நேரிடும் என தவிசாளர் தெரிவித்தாகவும் தெரியவருகின்றது.

எனினும் இவ்விடயத்தினை மறுத்துள்ள ஆரியவதி " மக்களை அச்சுறுத்தியிருந்தால் எவ்வாறு நான் ஒரு அரசியல்வாதியாக வந்திருக்க முடியும்?'' என்று கேள்வியெழுப்பியதுடன் முதலில் அனுமதிப் பத்திரத்தைத் வழங்குவதாகக் கூறிய இவ் அதிகாரி பின்னர் அதனை வழங்காது லஞ்சம் பெற்றுக்கொண்டு வழங்குவதற்காக இழுத்தடித்துக் கொண்டிருந்தார். நான் ஓர் நேர்மையான அரசியல்வாதியாதலால் இலஞ்சத்தை அனுமதிக்கவில்லை. அதனை அதிகாரசபையின் தலைவருக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரங்காடல்..

கலாநிதி எஸ். ரகுராம் அவர்களின் மேற்பார்வையில் கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக மாணவர்களால் நெறிப்படுத்தப்பட்ட விபரணப்படங்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இவ் விபரணப்படங்கள் தொடர்பாக திரு. கிருஸ்டி முருகுப்பிள்ளை அவர்கள் "ஒரு இரசிகனின் நோக்கு'' என்ற பார்வையை நிகழ்த்தவுள்ளார்.

வரவேற்பு நடனம், கோலாட்ட நடனம் ஆகியவற்றை திருமதி. கோ. சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகள் வழங்க காவடி நடனத்தை செல்வி மேகலா ஸ்ரீதர் அவர்களின் ஆதிகோணேஸ்வரா நாட்டிய கலாமன்ற மாணவிகள் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து "காலமும் கலைஞர்களும்'' என்ற தலைப்பில் மாயனின் உரை நிகழும். அதனைத் தொடர்ந்து சபையோரின் கருத்தாடலின் பின் ஆறு மணியளவில் நிறைவுரையினை ஆசிரியை மதிவதனி வழங்கவுள்ளார்.

ஆர்வளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கலை கலாசார அபிவிருத்தி அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## எலிக் காய்ச்சல்..

இந்நோய்க்கு இவ்வருடம் ஜனவரி மாதம் 230 பேரும், பெப்ரவரி மாதம் 268 பேரும், மார்ச் மாதம் 680 பேரும், ஏப்ரல் மாதத்தில் முதல் 15 நாட்களில் 98 பேரும் ஆளாகியுள்ளனர். களுத்துறை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இந்நோய்க்கு அதிகளவில் உள்ளாகியுள்ளனர். இந்நாட்டில் வயல் வேலைகளில் ஈடுபடும் விவசாயிகளே எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்படுவது வழமை.

அதனால் வயல் வேலைகளில் ஈடுபட முன்னர் பிரதேசத்திலுள்ள மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்குச் சென்று டொக்ஸிசைக்கிலின் மாத்திரைகளைப் பெற்றுப் பாவித்துக் கொள்ள வேண்டும். எலிக்-காய்ச்சலுக்குரிய நோய்க்காரணியின் தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்வதற்கு இம்மாத்திரை பெரிதும் உதவக்கூடியதாகும்.

அதனால் வயல் வேலைகளில் ஈடுபடுபவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது அவசியம் என இது தொடர்பாக சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்பு பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் பபா பலிகவர்தன குறிப்பிட்டார்.

# இயல்பில்லா வாழ்வில் ஈழத்தமிழர்கள்..

கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதியில் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. பொருளாதார நடவடிக்கைகளில் சற்று சுறுசுறுப்பு காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி வரை சென்றோம். மார்க்கெட் பகுதிகளில் மக்கள் கூட்டம் இருந்தது. இருப்பினும் அவர்கள் மத்தியில் ஒரு சகஜமான வாழ்க்கை சூழல் இல்லை என்பதை காண முடிந்தது. இன்னமும் ஒருவித அச்ச உணர்வு அவர்களிடம் உள்ளது.

தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில், முன்பிருந்த நிலை தற்போது இல்லை, மாறிக் கொண்டே வருகிறது. தமிழர் பகுதிகளில்,சிங்களக் குடியேற்றமும் அதிகமாக உள்ளது. தங்களின் விளை நிலங்களை எல்லாம் சிங்களவர்கள் கைப்பற்றுவதாக தமிழர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவின் நிதி உதவியுடன் கட்டப்படும் வீடுகளை பார்த்தோம். ஓரளவு கட்டிக் கொடுத்துள்ளனர். மற்றப்படி சொல்லக் கூடிய அளவுக்கு சிறப்பாக பணிகள் எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இலங்கையில், போர் முடிந்து நான்காண்டுகள் ஆனாலும், தமிழர்கள் பிரச்சினை அப்படியே உள்ளது. அங்குள்ள நிலைமைகளை பார்க்கும் போது, தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவது, முற்றிலும் சந்தேகமே. அதிகாரங்களை அளிக்க, இலங்கை அரசாங்கம் மிகுந்த தயக்கம் காட்டுவதாகவே தெரிகிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு, இந்த மாதம் தேர்தல் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், அதுவும் நடக்கவில்லை. செப்டெம்பர் வரை அந்தத் தேர்தல்கள் தள்ளிப் போடப்பட்டுள்ளன.

பொலிஸ் அதிகாரம், நில உரிமை அதிகாரம் போன்றவை, தமிழர்களின் பிரச்சினைகளை ஓரளவு தீர்க்க உதவும். ஆனால், இந்த இரண்டையும் இலங்கை அரசு தரவே தராது என்பது நிதர்சனமாக தெரிகிறது.

தமிழர் பகுதிகளுக்கு மாகாண அரசியல் அதிகாரம் வழங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதாக இலங்கை அரசாங்கம் சொல்கிறது. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழ் தேசிய முன்னணியைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்க மறுக்கின்றனர். இலங்கை அரசு காலம் கடத்தும் வேலையை செய்வதாகவும் அவர்கள் குறை சொல்கின்றனர்.

அங்கு நடந்த போரின்போது இடம்பெற்ற அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க இலங்கை அரசே குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளைக் கூட நிறைவேற்ற இலங்கை அரசு ஆர்வம் காட்டவில்லை. இலங்கையில், தமிழ்த் தலைவர்களான சம்பந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் இந்திய தூதரக அதிகாரி மகாலிங்கம் ஆகியோரை சந்தித்தோம். நேரமின்மை காரணமாக, கிழக்குப் பகுதிக்குச் செல்ல முடியவில்லை. பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச மற்றும் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரையும் சந்தித்தோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இவர்களின் இலங்கைப் பயணமானது சந்தேகத்திற்கிடமாக இருப்பதாகவும், அவர்களது பயணம் தொடர்பான முழு அறிக்கையொன்றினைத் தனக்களிக்குமாறும் உரிய அரச நிர்வாகிகளை இலங்கை சனாதிபதி உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன. இந் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கையின் சனாதிபதியைச் சந்திக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது.

# இலங்கையில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு

இலங்கையில் நடைபெறவுள்ள உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பான கலந்துரையாடல் கொழும்பு 02, தாருஸ்ஸலாம் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. அம் மாநாட்டுத் தலைவர் நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# மின் கட்டண அதிகரிப்பின் எதிரொலி பாண் விலையும் அதிகரிக்கும் அபாயம்

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு இன்று புதன்கிழமை அனுமதி வழங்கியுள்ளது. மின் கட்டண உயர்வுக்கான சூத்திரத்தினை இலங்கை மின்சார சபை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளித்தது.

இதனையடுத்து சில திருத்தங்களுடன் மின் கட்டண உயர்வுக்கான அனுமதியை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இதனால் ஏப்ரல் 12ஆம் திகதியிலிருந்து மின் கட்டணத்தினை அதிகரிக்கவும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.இதேவேளை மின்சார கட்டணம் அதிகரிக்கப்-பட்டுள்ளமையினால் பாணின் விலையும் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன அறிவித்துள்ளார். மின்கட்டணம் அதிகரித்துள்ளமையினால் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளை அதிகரிப்பதனை தவிர வேறு வழியில்லை. விலைகளை அதிகரித்து கொள்வதற்கான பெரிய வாய்ப்பொன்று ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது தெரிவித்துள்ள அவர் ஏனைய, பேக்கரி பொருட்களின் நிறையை குறைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## இளம் பெண் தற்கொலை..

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி புதுவருடமன்று காலை உயிரிழந்தார்.

ஒரு போதும் மது அருந்தாத, குறித்த பெண்ணின் கணவர் புதுவருட கொண்டாட்டத்தின் போது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்தியுள்ளார். இதனை சகிக்க முடியாத அவரது மனைவி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ரிஸானா நபீக்கின்..

சவூதி அரேபியாவில் மரண தண்டனை தண்டனை நிறைவேற்றப்பட்ட மூதூரை சேர்ந்த ரிஸானா நபீக்கின் கும்பத்திற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு இலட்சம் ரூபா நிதியே ரிசானா நபீக்கின் கும்பத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவி சிரேஸ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியினால் ரிசானா நபீக்கின் தந்தையிடம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் புரவலர் ஹாசீம் உமரும் கலந்துகொண்டார்.

# கைதடி இரட்சணிய சேனை சிறுவர் இல்லத்தில் நடந்தது என்ன?

யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள இரட்சணிய சேனை சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள சிறுமிகள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பில் சிறுமியொருவரைப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த இல்லத்தில் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, அந்த இல்லத்தைச் சேர்ந்த 12 சிறுமிகள் நேற்று முன்தினம் அங்கிருந்து தப்பியோடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து 7 சிறுமிகளை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சிறுமிகள் மருத்துவ பரிசோதனையின் பின்னர், நீதிமன்ற உத்தரவுக்கமைய வேறு ஒரு சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்-பட்டிருப்பதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

எனினும், மருத்துவ பரிசோதனைகளின் முடிவுகளை கூற அவர் மறுத்துவிட்டார்.

கைதடி இரட்சணிய சேனை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் உடல், உள வளர்ச்சி குன்றிய மற்றும் சமூகத்தில் பாதிக்கப்பட்ட 18 சிறுமிகள் சிறுவர் நலன் பேணும் அதிகாரிகளின் ஏற்பாட்டில் பராமரிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமி ஒருவர் மீது குற்றமிழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், அது எந்த அளவிற்கு உண்மையானது என்பதை அது தொடர்பான விசாரணைகள் முடியும் வரையில் கூற முடியாது என்று சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் உமா தங்கவேல் தெரிவித்தார்.

இந்த இல்லத்தைச் சேர்ந்த சிறுமியர்கள் இப்போது நீதிமன்றத்தின் பொறுப்பில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பொலிசார் தெரிவித்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காகமும் மானும்

ஒரு காட்டிலே காகம் ஒன்றும் மான் ஒன்றும் நல்ல நண்பர்களாக இருந்தன. இருவரும் ஒரு மரத்தடியில் பேசிவிட்டு மரத்தின் கிளையில் காகமும் அம்மரத்தடியில் மானும் உறங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தன. இவ்வாறு இருவரும் ஒருவருக்கொருவர் நல்ல நண்பர்களாக இருந்தன. அன்றைய தினம் நடந்தவற்றை இருவரும் பரிமாறிக்கொள்வது வழக்கம். ஒரு நாள் மான் மரத்தடிக்கு வரவில்லை. சற்று நேரம் பொறுத்திருந்து பார்த்துவிட்டு காகம் யோசித்தது. மானுக்கு என்ன நடந்ததோ என கவலையுற்றது. ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என அஞ்சி உடனடியாக பறந்து மானைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து திரிந்தது அந்த காகம். தனது நண்பனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற பயம் அதனை மிக வேகமாக பறக்க வைத்தது. கடைசியில் மான் ஒரு வேடன் விரித்த வலையில் சிக்கி இருப்பதைக் கண்டது.

காகத்தைக் கண்டதும் மான் விம்மி விம்மி அழத்தொடங்கியது. என்னை எப்படியாவது காப்பாற்று நண்பா எனக் கூறியது. மான் அழுவதைக் கண்டதும் காகத்திற்கும் அழுகை வந்தது. காகம், கவலைப்படாதே நண்பா நான் உன்னை எப்படியாவது காப்பாற்றுவேன் எனக் கூறி சற்று நேரம் யோசித்தது.

ஆ... ... ஒரு யோசனை, நீ நான் சொல்வதைப் போல் நடித்தால் போதும் என்றது. மானும் ஆர்வமாகக் கேட்கத் தொடங்கியது. இன்னும் சற்று நேரத்தில் வேடன் வந்து விடுவான். நீ செத்தவன் போல கிட நான் உனது கண்களை மெதுவாகக் கொத்துவேன். வேடன் நீ இறந்துவிட்டாய் என எண்ணி வலையில் இருந்து உன்னை வெளியே எடுப்பான். அவன் வலையை முழுவதுமாக கழட்டி முடிக்கும் அந்த சமயத்தில் "கா.... கா.." எனக் கரைவேன். அப்போது நீ எழுந்து வேகமாக ஓடித் தப்பித்துக் கொள் எனக் கூறி ஓர் மரக்கிளையில் சென்று உட்கார்ந்து வேடனின் வருகைக்காக காத்திருந்தது. சற்று நேரத்தில் வேடன் வந்தான். வேடனின் வருகையை சைகை மூலம் தெரிவித்த காகம் தமது திட்டத்தை செய்யத் தொடங்கியது. வந்த வேடன் மானைப் பார்த்தான். மான் இறந்து விட்டது என எண்ணி வலையை மானிலிருந்து அகற்றினான். தகுந்த தருணம் பார்த்திருந்த காகம் கா.. கா.. எனக் கரையத் தொடங்கியதும் மான் மிக வேகமாக ஓடி உயிர் தப்பியது. வேடன் ஏமாற்றத்துடன் சென்றான். தன்னை பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்றிய காகத்திற்கு நன்றி கூறியது மான். இருவரும் சேர்ந்தே தாம் தங்கியிருந்த மரத்திற்குச் சென்றன. காகமும் மானும் சந்தோசமாகவும் மிகுந்த பாசத்துடனும் வாழ்ந்தன.

## அறிந்துகொள்ளுங்கள்


*சூரியன்...*

சூரியன் ஒரு முழுக்கோளம் என்கிற நம்பிக்கை அண்மையில் தகர்க்கப்பட்டிருக்கிறது.

சூரியனின் கோளத்தன்மையை நாசா விஞ்ஞானிகள் அண்மையில் துல்லியமாக அளந்துள்ளனர். இப்படி அளவீடு செய்வதற்கு Reuven Ramaty High-energy Solar Spectroscopi Imager என்னும் விண்தொலைநோக்கி பயன்பட்டுள்ளது. சூரியப் புள்ளிகள் தீவிரமாக இயங்கும் நாட்களில் சூரிய நடுக்கோட்டின் ஆரம், துருவ அச்சின் ஆரத்தைக் காட்டிலும் சற்றுப் பெரியதாக இருக்கிறதாம். சூரியனைச் சுற்றிலும் பழத்தோல் போன்ற ஒரு பொருள் உருவாவதால் துருவப் பகுதிகளில் நசுங்கிப்போன கோளமாக சூரியன் தோற்றமளிக்கிறதாம். சூரியனின் இடுப்பு சற்று பருத்திருக்கிறது என்பதுதான் இதன் பொருள்.

இந்த "பழத்தோல் பிதுக்கம்" காரணமாக சூரியன் ஒரு முழுமையான கோளம் இல்லை என்கிற கருத்து உறுதிப்படுகிறது. சூரியனின் தீப்பிழம்புகளை ஆராய்வதற்காக 2002ல் Reuven Ramaty High-energy Solar Spectroscopi Imager என்னும் விண்தொலைநோக்கி ஏவப்பட்டது. எக்ஸ் கதிர்களையும், காமா கதிர்களையும் பயன்படுத்தி இந்த விண்தொலைநோக்கி அளவீடுகளை செய்துள்ளது.

விண்மீன்களில் சூரியன் மட்டுமே மிக அதிகமான ஈர்ப்பு விசையைப் பெற்றிருக்கிறது. சூரியனின் கோள வடிவம் 0.001 சதவீதம் என்று இது நாள் வரையில் நம்பப்பட்டு




வந்தது. நிமிடத்திற்கு 15 சுற்றுகள் வீதம் சுழலக்கூடிய விண்தொலைநோக்கியின் பொருளருகு துளை வழியாக சூரிய வட்டத்தையும், தீப்பிழம்புகளையும் கண்காணித்தபோது, சூரியன் முழுமையான கோளம் இல்லை என்கிற உண்மை தற்செயலாக அறியப்பட்டுள்ளது.

இந்த பழத்தோல் பிதுக்கம் காந்தப்பண்புகளைக் கொண்டதாம். சூரியப்பரப்பில் குமிழ்களாகப் படரும் இந்த மேற்பரப்பிற்கு supergranules என்று பெயரிட்டுள்ளனர். பானையில் கொதிக்கும் நீர்க்குமிழ்களைப் போன்று பிறப்பெடுக்கும் இந்த supergranules மெள்ள மெள்ள விண்மீன்களின் அளவிற்கு உருப்பெருக்கம் அடைகின்றனவாம். supergranules ன் அளவு பூமியைப்போல் இருமடங்கு என்றும் கணக்கீடுகள் காட்டுகின்றன. இவை முழுக்க முழுக்க காந்தப்புல பிளாஸ்மாவால் ஆனவையாம்.

supergranules ன் மையத்தில் தோன்றும் காந்தப்புலம் மெதுவாக மேற்பரப்பை அடைகிறது. சூரியனில் ஏற்படும் காந்தப்புல மாற்றங்களால் g-mode எனப்படும் சூரிய ஈர்ப்பு விசையில் அலைவுகள் ஏற்படுகின்றன. சூரியனின் காந்தப்புல ஏற்றத்தாழ்வுகள், பூமியின் காந்தப்புலத்தை நிச்சயமாக பாதிக்கக்கூடியவை.

## பூக்கோவா மஞ்சூரி

*தேவையான பொருட்கள் :*

காலி பிளவர் - 1 பெரியது, பம்பாய் வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 5, மஞ்சள் தூள் - 1 தே.க, மசாலாத் தூள் - 1 தே.க, கறிமிளகாய்த் தூள் - 3 மே.க, உப்புத் தூள் - அளவிற்கு, மிளகுத் தூள் - அளவிற்கு, சோயா சோஸ் - 3 மே.க, கறி மிளகாய் - 250கிராம், தேங்காயெண்ணெய் - 8 மே.க, இஞ்சி - 1 துண்டு, உள்ளி - 4 பல்லு, கேசரிப் பவுடர் - 2 சிட்டிகை, தக்காளிப்பழம் - 100 கிராம், சோளமா - 2 மே.க

*செய்முறை :*

காலி பிளவரை மொட்டுகளாகத் தனித்தனியாக உடைத்து உப்பு நீரில் கழுவி நீரை வடியவிட்டெடுத்துக் கொள்ளவும். உள்ளி, இஞ்சி என்பவற்றை பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்க. பின்பு காலிபிளவரை பாத்திரத்திலிட்டு மிளகாய்த் தூள், அரைத்த கலவை, மஞ்சள் தூள், மசாலாத் தூள், உப்பு என்பவற்றையிட்டு முக்கால் தம்ளர் தண்ணீரும் சேர்த்து 5 நிமிடத்திற்கு மூடி அவிய வைக்கவும். வெங்காயம், பச்சைமிளகாய், கறிமிளகாய், தக்காளிப்பழம், என்பவற்றை வட்டவடிவான துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். 5 நிமிடத்தின் பின்பு அடுப்பிலிருந்து இறக்கி, சோளமா 1 மே.கரண்டியை அதன் மேல் தூவி கரண்டி போடாமல் நன்றாகக் குலுக்கிக் கொள்க. பின்பு மீண்டும் 2 நிமிடங்கள் மூடி அடுப்பில் வைத்து இறக்கி மீண்டும் கரண்டி வைக்காமல் குலுக்கிச் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் தாச்சியில் எண்ணெயை விட்டு அடுப்பில் வைத்துக் கொதித்ததும், வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய், கறிமிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவிட்டு நன்றாக வதங்கியதும் தக்காளிப் பழம், அவித்த காலிபிளவர் கலவை, சோயா சோஸ், 1 தம்ளர் தண்ணீரில் கரைத்த சோளமா, கேசரிப்பவுடர், கரைத்த கலவை என்பவற்றையிட்டு உப்புத்தூள், மிளகுத் தூள் என்பவற்றை அளவிற்கு இட்டு நன்றாகச் சேர்த்துக் கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்க.

இதே முறையில் காலிபிளவரிற்குப் பதிலாக இறைச்சியைப் பாவித்து சிக்கன் மஞ்சூரி தயாரித்துக் கொள்ளலாம்.






# பெண்களுக்கு இரும்புச்சத்து

## மாத்திரைகள் நல்லதா? உணவுகள் நல்லதா?

இரும்பு சத்தின் குறைபாட்டால் வரும் நோய்களே அதிகம் என உலக சுகாதார மையம் தெரிவிக்கிறது. 80 சதவீதம் பேர் இக்குறைப்பாட்டால் அவதியுறுவதாகவும், அதில் 33 சதவீதம் பேர் இரத்தச் சோகையால் அவதியுறுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நமது உடலின் ஆரோக்கியத்திற்கு இரும்புச் சத்து மிகவும் அவசியம். பொதுவாக நம் உடலுக்கு தேவைப்படும் இரும்புச் சத்து நமக்கு உணவின் மூலம் போதுமானதாக கிடைப்பதில்லை. இதனால் ஆரம்பத்தில் இரும்பின் தேவையை உடல் அதன் சேமிப்பிலிருந்து எடுத்துக் கொள்கிறது. நாளடைவில் இரும்புச் சத்து குறைவதால் இரத்தச் சோகை ஏற்படுகிறது.

பெரும்பாலும் பெண்களுக்கே அதிக அளவில் இரும்புச்சத்து தேவைப்படுகிறது. மாதவிலக்கு காலங்களில் அதிக இரத்தப்போக்கு இருந்தால் உடலில் இரும்புச்சத்தின் இருப்பு குறைய ஆரம்பிக்கும். இதனால் இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை கணிசமாக குறையும்.

இதுபோல் சிறுகுடல் இரும்புச்சத்தை உறிஞ்சுவதில் தடை ஏற்படுவதாலும், இரும்புச்சத்து குறைபாடு உண்டாகிறது. சிறுநீரக பாதிப்பு இருந்தாலும் இரத்த சிவப்பணுக்களை உற்பத்தி செய்யத் தூண்டும் ஹார்மோன்கள் உற்பத்தி சீராக செயல்படுத்த முடியாமல் இரும்புச்சத்து குறைவு ஏற்படும்.

விட்டமின் ஏ, இரும்புச்சத்தை திசுக்களுக்கு அனுப்பும் வேலையைச் செய்கிறது. இந்த வைட்டமின் ஏ குறைபாட்டால் இரும்புச்சத்து திசுக்களுக்குக் கிடைக்காமல் இரத்தச் சோகை ஏற்படுகிறது. இத்தகைய பாதிப்பு இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அதிகம் காணப்படுகிறது. இரும்புச்சத்து குறைபாட்டால் உண்டாகும் அறிகுறிகள்.

பொதுவாக உடலில் இரும்புச் சத்து குறைவதனால் இரத்த சோகை உண்டாகும். அதிக தளர்ச்சி, சுறுசுறுப்பின்மை, சிறுவயதில் மூளை வளர்ச்சி குறைவது, புரிந்துகொள்ளும் திறன் குறைவது போன்றவை ஏற்படும். நாக்கில் வீக்கம். உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்து போகும். உடல் வெப்ப நிலையை சமனாக்கி பாதுகாக்கும் செயலிலும் குறைபாடு உண்டாகும். மண், சாம்பல் போன்றவற்றை உண்பதால் இரத்த சோகை ஏற்படுவதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

குடலில் வீக்கம் அல்லது புற்று நோய்க்கான அறிகுறிகள் இருந்தாலும் சோகை உண்டாகும். இவை இரும்புச்சத்து குறைவினால் உண்டானவை அல்ல. இரும்புச்சத்து அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டியவர்கள் :

கருவுற்ற பெண்கள், சிறு குழந்தைகள், பருவ வயதை அடையும் பெண் குழந்தைகள் போன்றோருக்கு இரும்புச்சத்து அதிகம் தேவைப்படுகிறது. மாதவிலக்கு சுழற்சியின் போது ஏற்படும் இரத்த இழப்பால் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படுகிறது. எனவே பருவம் அடைந்த அனைத்து பெண்களுக்கும் இரும்புச்சத்து தேவை அதிகமாகிறது.

சைவ உணவு உண்பவர்களை விட அசைவ உணவு உண்பவர்களுக்கு மிக அதிக அளவில் இரும்புச்சத்து கிடைக்கிறது. ஆனால் சைவ உணவில் அதிகளவு இரும்புச்சத்து நிறைந்த கீரை வகைகளை அன்றாடம் சேர்த்துக்கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...



## The Sunday Times:

### வினைத்திறனுள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கையில் தடை

தொழில் நுணுக்கம் கொண்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை இலங்கையில் குறைத்து அவ் இடங்களுக்கு இலங்கையரை வேலைக்கமர்த்தவுள்ளதாக தொழிலாளர் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

பொது மற்றும் தனியார் துறைகளின் தொழிற்றிட்டங்களில் தற்போது பணியாற்றிவரும் இந்தியத் தொழிலாளர்களுக்கும் எதிர்வரும் காலங்களில் புதிதாக தொடங்கப்படவுள்ள திட்டங்களிற்கும் இந்த முடிவுக்கு ஏற்பவே தொழிலாளர்கள் தேர்வு செய்யப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையின் இரும்பு உருக்குத்துறையில் சுமார் 1500ற்கும் மேற்பட்ட இந்தியத் தொழிலாளர்களும் கொழும்புத் துறைமுகத்தில் 800 இந்தியத் தொழிலாளர்களும் தொழிலாற்றுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் முதலீட்டுச் சபை எதிர்வரும் காலங்களில் முதலீட்டுத் திட்டங்களை அனுமதிக்கும் போது இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் தடைகளை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். தற்போது வெளிநாட்டவரால் மேற்கொள்ளப்படும் பணிகளை எதிர்வரும் காலத்தில் இலங்கையர் மேற்கொள்ளும் முகமாக அவர்கள் பயிற்சிகளையும் படிப்புக்களையும் மேற்கொள்ள ஓர் உந்து சக்தியாகவே இச் செயற்பாடுள்ளது என்றார் அமைச்சர். இம் முயற்சியால் பெருமளவு வேலைவாய்ப்புக்களை இலங்கையர் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அகில இலங்கை துறைமுக மற்றும் கப்பல் கட்டும் தளப் பணியாளர்களின் தலைவர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

### நில அபகரிப்பை கண்டுபிடித்துள்ளது குற்றப்புலனாய்வுத் துறை

கொழும்பிலும் அதன் அண்டிய பிரதேசங்களிலும் அரச நில அபகரிப்பில் ஈடுபட்டதாகக் சந்தேகிக்கப்படும் நிலத் தரகர்கள் சிலரையும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுக்கள் சிலரையும் குற்றப் புலனாய்வுத்துறையினர் தமது விசாரணைகளுக்கு ஆளாக்கியுள்ளனர்.

சுமார் நான்காயிரத்து முன்னூறு குற்றச் சாட்டுக்களைப் பெற்றுக் கொண்டுள்ள குற்றப்ப்புலனாய்வுத் துறை அக்குற்றங்களுடன் தொடர்புடைய சுமார் 30 குழுக்களின் அங்கத்தவர்களைக் கைது செய்துள்ளது.
சுமார் ஆயிரத்து இருநூற்றுத் தொன்னூற்றியரண்டு குற்றச்சாட்டுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பரிசோதகர் ஏ.எஸ். கருணாதிலக தெரிவித்தார்.

### நீதிபதிகளின் இடமாற்றம் விபரங்களைக் கோரியது பொதுநலவாயச் செயலகம்

பெருமளவிலான மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்ற நீதிபதிகளினை கடந்த குறுகிய காலத்தில் இலங்கை அரசானது இடமாற்றியிருப்பது தொடர்பான விபரங்களை வழங்குமாறு தம்மைப் பொதுநலவாயச் செயலகம் கோரியுள்ளதாக இலங்கைச் சட்டவாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சுமார் இருநூற்று நாற்பது நீதிபதிகளில் 80 நீதிபதிகளின் இடமாற்றங்கள் தொடர்பாகவே விபரங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் இடமாற்றங்கள் யாவும் 44வது பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இச் சிரேட்ட அலுவலர்கள் 43வது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிராண குற்றச்சாட்டுக்களிற்கு எதிராக கடும்போக்குடன் நடந்துகொண்டவர்கள் என்பதும் கருத்திற்கொள்ளத்தக்கது.

44வது பிரதம நீதியரசர் மொகான் பீரிஸ் அவர்கள் தனது நியமனத்தின் பின்னர் நீதிபதிகளைச் சந்தித்த போது இவ்வாறானதொரு நியாயமற்ற இடமாற்றங்களைத் தான் எப்போதுமே செய்யப் போவதில்லை என்ற வாக்குறுதிக்கு மாறாக இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவ்விடமாற்றங்கள் தொடர்பாகப் பேசுவதற்கே நீதிபதிகள் அஞ்சுகின்றார்கள் எனத் தெரிவித்துள்ள இலங்கைச் சட்டவாளர் சங்கத்தின் பேச்சாளர் இவ்விடயம் தொடர்பாக ஒரு உப குழுவொன்றைத் தாம் நியமித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## The Sunday Observer:

### மேற்குலகு மனித உரிமை விவகாரத்தைக் கொண்டு அரசை ஒரு வழிக்குக் கொண்டு வர முயற்சிக்கிறது

வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இலங்கை அரசினை ஒரு வலைக்குள் விழுத்துவதற்கு மேற்குலகுகள் முயற்சி செய்வதாக விஞ்ஞான நலத்துறை அமைச்சின் சிரேஸ்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். இம்முயற்சியை அந்நாடுகள் பலகாலமாக மேற்கொள்கின்றன. அந்நாடுகளே இவ்வுலகில் பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவை என்பதே தெளிவானது. இதனை அவர்கள் தமது காலணித்துவ காலத்திலிருந்தே மேற்கொள்கிறார்கள். இவ்வாறு மிகப்பெரும் மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடும் அவர்கள் எவ்வாறு மனித உரிமை மீறல்களுக்காக ஏனைய நாடுகளை நோக்கி தமது சுட்டுவிரலை நீட்டுவார்கள் என்று அமைச்சர் கேள்வி எழுப்பினார். மேற்குலகை ஆதரிக்கும் பல நாடுகள் மனித உரிமை மீறல்களில் முன்நிலையில் உள்ளன, ஆனால் அந்நாடுகளை மனித உரிமை விடயம் சார்பாக கவனிப்பதாக இல்லை. ஆனால் மேற்குலகின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஓர் சுதந்திரமான அரசு செயற்படவில்லையாயின் அவ்வரசிற்கெதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை மேற்குலகு சுமத்த முன்நிற்கின்றது. அதனடிப்படையில் தான் இலங்கைக்கெதிராகவும் மேற்குலகு மனிதஉரிமை மீறல்களை முன்நிறுத்தியுள்ளது. உதாரணமாக சர்வதேச நாடுகளால் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை அமெரிக்கா வியட்நாமியப் போரில் பாவித்ததாகவும் அதனால் சுமார் 5மில்லியன் வியட்நாமியர்கள் இன்றும் அவஸ்த்தைப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அந்நாடு தெரிவித்துள்ளது. ஆனால் அமெரிக்காவுக்கு எதிராக எவருமே இவ்விடயத்தில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை என்பதுடன் சர்வதேச நீதிமன்றத்திற்கு அமெரிக்காவை இழுக்கவுமில்லை. ஆனால் வருந்தத்தக்க விடயமாக வியட்நாமின் தற்போதய சில நடவடிக்கைகளூடாக அமெரிக்கா வியட்நாமுக்கெதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இவ்விடயம் மேற்குலகின் மனநிலைக்கான அற்புதமான உதாரணமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

### இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதில்லை

சர்வதேச கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் மீது இலங்கை கடற்படை தாக்குதலை நடத்துவதாக அந்நாட்டு மீனவர்கள் தெரிவித்துள்ள கூற்றை வட மாகாண மீனவர் சங்க சமாசம் நிராகரித்துள்ளது. ஆழ்கடல் மீன்பிடி ரோலர்களில் இலங்கை கடற்பரப்பை ஆக்கிரமிக்கும் இந்திய மீனவர்களினால் இலங்கையின் கடல்வளம் வற்றிப் போகின்றது. இவ்வாறு கடல்வள ஆக்கிரமிப்பைத் தடுக்கும் முயற்சியில் இலங்கைக் கடற்படை இந்திய மீன்பிடிப் படகுகளைக் கைப்பற்றுகின்றனவே தவிர அம்மீனவர்கள் மீது தாக்குதல் எவற்றையும் நிகழ்த்தியதாக தற்போது வரை இலங்கை மீனவர்கள் தமக்கு தெரிவிக்கவில்லை என இச்சமாசம் மேலும் தெரிவிக்கின்றன. 118 மீனவ சங்கங்களைக் கொண்ட வட மாகாண மீன்பிடியாளர்கள் சங்க சமாசத்தின் தலைவர் எஸ்.தவரெட்ணம் கூறும் போது அண்மையில் இந்தியாவின் மீனவர்களால் அரங்கேற்றப்பட்டுள்ள போராட்டங்கள் உண்மைப்புலம் அற்ற முழுவதுமான அரசியல் நோக்கம் கொண்ட செயற்பாடு என்றும் தெரிவித்தார். அவரது கூற்றை சமாச அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### அகதி அந்தஸ்தினை நிராகரிக்குமாறு அவுஸ்திரேலியாவிடம் கோரிக்கை

சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்து அகதி அந்தஸ்த்தினைக் கோருபவர்களுக்கு அதனை வழங்க வேண்டாம் என அவுஸ்திரேலிய அரசை அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவர் கோரியுள்ளார். அகதி அந்தஸ்தினைக் கோருபவர்கள் எவருமே உண்மையில் அகதிகள் அல்ல. அவர்களை எவ்வளவு வேகமாக நாட்டுக்கு திருப்பியனுப்ப வேண்டுமோ அவ்வளவு வேகமாக இலங்கைக்கு திருப்பியனுப்புங்கள் என அவுஸ்திரேலியாவிற்கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க கேட்டுக்கொண்டுள்ளார். 4 வருடங்களுக்கு முன் இலங்கையிலிருந்த பயங்கரவாதத்தை இல்லா-தொழித்த பின் இலங்கை தமிழர்களுக்கெதிரான எந்த விதமான மனித உரிமை மீறல்களும் இலங்கையி-லில்லை என்பதை அவுஸ்திரேலியா புரிந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## The Leader

### மாத்தளைப் புதைகுழிக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள்

மாத்தளைப் புதைகுழிக்கு அருகில் இரவு வேளைகளில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் இருப்பதாக காவல்துறை மா அதிபருக்கு எழுத்து மூலமாக குற்றச்சாட்டை ஜேவிபி மேற்கொண்டுள்ளது.

ஜேவிபியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தகவல் தரும் போது கடந்த புதன்கிழமை இரவு வேளையில் இராணுவத்திற்குச் சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் பிக்கப் வண்டியோன்று இப் புதைகுழியமைந்துள்ள பிரதேசத்தில் அனாவசியமாகச் சுற்றித் திரிந்ததாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதுடன் அன்றைய இரவு 9 மணியளவில் சுமார் 10 பேர் இராணுவச் சீருடைகளுடன் புதைகுழியை அண்டிய பகுதிகளில் பொலரோ ரக ஜீப் வண்டியில் வந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார். விசாரணைகள் இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அவ்விசாரணைகளைத் திசை திருப்பும் முகமாக எதையாவது அப் புதைகுழிப் பிரதேசத்தில் செய்யம் வாய்ப்பை யாருக்கும் வழங்க காவல்துறை அனுமதிக்கக் கூடாது எனத் தனது கடிதத்தில் கேட்டுள்ளார் அவர். இக் கடிதம் தொலைநகல் மூலமே காவல்துறை மா அதிபருக்கு அனுப்பப் பட்டுள்ளதாக காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன. அக்கடிதத்தின் அடிப்படையில் முழுவிசாரணைகள் நடாத்தப்படும் என காவல்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் அக்கடிதத்தில் அப்பிரதேசத்திற்கு வருகைதந்ததாகக் கூறப்படும் இரு வாகனங்களின் வாகன இலக்கத் தகடுகளின் விபரங்கள் சேர்க்கப்படவில்லை என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### வாசுவிற்கு ஆதரவளிக்க அரச முஸ்லிம் எம்பிக்கள் தயார்!!!

வெறுக்கத்தக்க பேச்சுக்களைப் பொது மேடைகளிலும் பொது இடங்களிலும் நிகழ்த்துவதைத் தடைசெய்யத்தக்கதான சட்ட மசோதாவினை முன் மொழிய முயற்சியினை மேற்கொண்டுள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் முயற்சிக்குத் தாம் ஆதரவு வழங்கவுள்ளதாக அரசுடன் கூட்டாக இயங்கும் முஸ்லிம் எம்பிக்கள் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம் சிரேட்ட அமைச்சரான பௌசி தெரிவிக்கையில் "இவ்வகையான சட்ட மசோதாவின் ஊடாகவே இனங்களுக்கிடையிான நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியும்" எனத் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளை வெற்றிகொண்ட பின்னர் கிடைத்துள்ள சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாயின் இம் மசோதாவை ஏனைய முஸ்லிம் எம்பிக்களும் ஆதரவளிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

### தனியார் மருத்துவ நிலையங்களின் மீது கட்டுப்பாடு

தனியார் மருத்துவ நிலையங்களைப் பதிவு செய்யும் சட்டத்தில் மேலும் திருத்தங்களை உருவாக்குவதன் ஊடாக சுகாதார அமைச்சருக்கு அந் நிலையங்கள் மீது மேலதிகக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளும் வலுவை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

சில தனியார் வைத்தியசாலைகள் நோயாளரைத் தவராக நடாத்தியுள்ள போதும் அவற்றின் மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவையாக இல்லை என பிரதிச் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### உயர்தொழில்நுட்ப ஆயுதங்களுடன் உலாவரப்போகும் சிறைச்சாலை அலுவலர்கள்

சிறைச்சாலை அலுவலர்க்கு உயர்நுட்பம் வாய்ந்த ஆயுதங்களை வழங்கவிருப்பதாக சிறைச்சாலை களுக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்துள்ளார். அவ்வாறு வழங்கப்பட்டபின் காவலர்களால் எவ்விதமான சிறைச்சாலைக் கலவரத்தையும் நொடிப்பொழுதில் அடக்கிவிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். வெலிக்கடைச் சிறைக்கலவரத்தின் அறிக்கையானது எழுத்துப் பிழைகளால் வெளிவரத் தாமதமாகியுள்ளது என்றும் அவர் செவ்வினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முரசின் விளையாட்டு செய்திகள்

### வேல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கன்னி முயற்சி

# மின்னொளியில் திருமலையில் மென்பந்துப் போட்டிகள்

தமது 30வது வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக வேல்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் திருமலை நகரில் மின்னொளி மென்பந்துச் சுற்றுப்போட்டியொன்றினை நடாத்திக்கொண்டிருக்கின்றனர்.

வேல்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கன்னி முயற்சியான இம் மின்னொளி மென்பந்துப் போட்டியானது திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் திடலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் முதலாவது மின்னொளிப் போட்டியென்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்து பெருமளவு அணிகள் விண்ணப்பித்திருந்த இம் மின்னொளிப் போட்டிகளுக்கு 40 அணிகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதாக வேல்ஸ் நிர்வாகம் அறிவித்துள்ளது.

போட்டிகள் அணிக்கு 9 பேரைக்கொண்ட 6 பந்துப்பரிமாற்றங்களுடனான இம் மென் பந்துப் போட்டிகள் இம் மாதம் 19ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருப்பதுடன் இறுதிப் போட்டி 21ம் திகதி நடைபெறுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருமலை இந்துக் கல்லூரிக்கெதிரான போட்டியை வென்றது யாழ் கல்லூரி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் திருக்கோணமலை இந்துக் கல்லூரிக்கும் இடையிலான சினேகபூர்வ மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று ஏப்ரல் மாத முதல் வாரத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுத் திடலில் நடந்தேறியது. இப்போட்டிக்காக திருக்கோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் 19 வயதிற்குட்பட்ட பாடசாலை அணியை அதன் பயிற்றுவிப்பாளரும் பாடசாலையின் விளையாட்டுப் பொறுப்பாசிரியருமான திரு. சிங்காரவேலு சசிகுமார் அவர்கள் அழைத்துச் சென்றிருந்தார்கள்.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி 20 பந்துப் பரிமாற்றங்களிலும் தனது 8 இலக்குகளை இழந்த அக் கல்லூரி 172 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி புதிய களத்தில் தனது திறமையான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. எனினும் தனது அனைத்து இலக்குகளையும் 125 ஓட்டங்களுக்கு இழந்ததால் போட்டியில் 47 ஓட்டங்களால் யாழ் கல்லூரி வெற்றியீட்டியுள்ளது.



## தேசிய இருபதுக்கு 20 போட்டிகளில் அரையிறுதிக்குள் நுழைந்துள்ள அணிகள்

பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் தேசிய ரீதியிலான இருபது - 20 துடுப்பாட்ட போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் போட்டியிடுவதற்கான அணிகள் தெரிவாகியுள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்.கல்லூரி விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, மானிப்பாய் இந்து கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

மேற்படி சுற்றுப்போட்டியில் காலிறுதி ஆட்டங்களில், மானிப்பாய் இந்து கல்லூரி அணியினை வென்று சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினை வென்று கொக்குவில் இந்து கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினை வென்று மட்டக்களப்பு பெரிய கல்லாறு மத்திய கல்லூரி அணியும் ஹம்பாந்தோட்டை சென்.ஜோன் பொஸ்கோ அணியினை வென்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் அரையிறுதிக்குள் நுழைந்தன.

## சல்மான் பட் – முகம்மது ஆஷிப் தொடஉந்த மேல் முறையீட்டு மனுக்கள் நிராகரிப்பு!

இங்கிலாந்தில் கடந்த 2010ம் ஆண்டு நடந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் அணியின் அப்போதைய கேப்டன் சல்மான் பட், வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது ஆசிப், முகமது ஆமிர் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது.

விசாரணை முடிவில் சல்மான் பட்டுக்கு 2 ஆண்டு 6 மாதங்களும், முகமது ஆசிபுக்கு ஓர் ஆண்டும், முகமது ஆமிருக்கு 6 மாதங்களும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவர்கள் சிறையில்



அடைக்கப்பட்டனர். இதற்கிடையே சூதாட்டத்தில் ஈடுபட்ட மூவரும் சர்வதேச போட்டிகளில் விளையாட ஐ.சி.சி. தடை விதித்தது. சல்மான் பட் 10 ஆண்டுகளும், முகமது ஆசிப் 7 ஆண்டுகளும், முகமது ஆமிர் 5 ஆண்டுகளும் தடைபெற்றனர்.

இந்நிலையில் தண்டனைக் காலம் முடிந்து வெளியில் வந்தபின்னர் சல்மான் பட் மற்றும் முகமது ஆசிப் ஆகிய இருவரும் தங்கள் மீதான தடையை எதிர்த்து விளையாட்டுகளுக்கான மத்தியஸ்த கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தனர்.

விசாரணை முடிவடைந்த நிலையில், இருவரின் மேல்முறையீட்டு மனுக்களையும் விளையாட்டுகளுக்கான மத்தியஸ்த கோர்ட் நிராகரித்தது. இதனால் அவர்களின் கிரிக்கெட் வாழ்க்கையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் தடையை எதிர்த்து தனது வழக்கறிஞர் குழு தொடர்ந்து முறையீடு செய்யும் என்று சல்மான் பட் கூறியுள்ளார்.

## ஸ்ரீசாந்துக்கு எச்சரிக்கை

ஹர்பஜனுக்கெதிரான பழைய சம்பவத்தை "டுவிட்டரில்" வெளியிட்டு மீண்டும் சர்ச்சை கிளப்பிய ஸ்ரீசாந்த்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.,) எச்சரித்துள்ளது.கடந்த 2008ல் நடந்த முதலாவது ஐ.பி.எல்., தொடரில் மொகாலியில் நடந்த லீக் போட்டியில் (ஏப்ரல் 25) பஞ்சாப் அணி, மும்பை அணியை வீழ்த்தியது. இப்போட்டி முடிந்ததும் வீரர்கள் கைகொடுக்கும் போது பஞ்சாப் வீரர் ஸ்ரீசாந்த் ஏதோ கூற தோல்வியடைந்த விரக்தியில் இருந்த மும்பை வீரர் ஹர்பஜன் சிங் அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இப்பிரச்னையில் மீதம் இருந்த போட்டிகளில் விளையாட ஹர்பஜனுக்கு தடை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## 2013ம் ஆண்டின் அசாதாரண வீரர் : பெல்ப்ஸ்

லாரஸ் அகடமியின் அசாதாரணமான சாதனை விருது ஒலிம்பிக் ஜாம்பவான் மைக்கேல் பெல்ப்ஸ்க்கு வழங்கப்பட்டது. கடந்த லண்டன் ஒலிம்பிக் தொடருடன் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வுப்பெற்ற அமெரிக்க ஒலிம்பிக் சூப்பர் ஸ்டார் மைக்கேல் பெல்ப்ஸ் 18 தங்கங்கள் உட்பட 23 பதக்கங்களைக் குவித்துள்ளார். இதன்மூலம் ஒலிம்பிக் வரலாற்றில் அதிக பதக்கங்கள் குவித்தவர் வரிசையில் முதலிடம் பிடித்து புதிய வரலாற்று சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## மலையகச் சிறப்பிதழாக "மகுடம்"

கிழக்கிலங்கையிலிருந்து திரு மைக்கல் கொலின் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கலை இலக்கியச் சஞ்சிகையான மகுடம் சஞ்சிகையின் மூன்றாவது இதழ் மலையகச் சிறப்பிதழாக வெளியாகவுள்ளது.

25.04 2013ல் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் காலை 10 மணிக்குக் கலாநிதி.ந.ரவீந்திரன் தலைமையில் இச்சிறப்பிதழின் அறிமுகவிழா நடைபெறவுள்ளது.

இதழ் விமர்சனத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு.பெ.சரவணகுமார் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். நன்றியுரையினை ஜெ.பபியான் வழங்குவார்.

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்ட அழைப்பு

தி/மூ/மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் பாடசாலையின் மாநாட்டு மண்டபத்தில் 20.04.2013 சனிக்கிழமையான இன்று காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. இந்நிகழ்வில் கடந்தகால செயற்திட்ட மீளாய்வு, புதிய நிர்வாகக்குழு தெரிவு, நடைமுறைப்படுத்த வேண்டிய புதிய செயற்திட்டங்கள் போன்றன முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படவுள்ளன. குறித்த நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பழைய மாணவர் சங்கத்தினால் அழைப்பு விடுக்கப்படுகின்றது

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் 20. 04. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.